Registered as a News Paper
இலவசப் பிரதி
விலை ரூபா:10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-26 | 12-11-2005 | சனிக்கிழமை | ஓசை-268


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
T.P:0712-610008

## யாழ். இல் மாணவர் எழுச்சி மாநாடு

# மாணவர்கள் பிரச்சினைகள் குறித்து கல்விச்சமூகம் ஒன்று கூடி ஆராய்வு

## எழுச்சிப் பிரகடனமும் வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக தமிழ் மாணவர்கள் தமது பிரச்சினைகளை ஆராய்வதற்கான எழுச்சி மாநாடு நேற்றுக் காலை 10.15 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மிகவும் எழுச்சிகரமாக இடம்பெற்றது. இதில் மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய கல்விச் சமூகம் ஒன்று கூடியது. இதில் எழுச்சிப்பிரகடனம் வெளியிடப்பட்டது.**





தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் சி.குனேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியினை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மாணவன் சிவகுருநாதன் ரங்கேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ், மானிப்பாய் உயரப்புலம் வித்தியாலய அதிபர் திருமதி சண்முகரெத்தினம், யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரி உப பீடாதிபதி க.தனபாலன் வேம்படிமகளிர் கல்லூரி மாணவி ஆகியோர் ஏற்றி வைத்தார்கள்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துணை வேந்தர் சு.மோகனதாஸ், வணிகபீடத் தலைவர் க.தேவராசா ஆகியோர் வழங்கினார்கள்.

பாடசாலைகள் ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தவிர மற்றும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.பல்கலைக்கழக கல்வியாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப் புலம் சார்ந்தவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு மாணவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

குறிப்பிட்ட மாநாட்டில் தற்போது தமிழ் மாணவர்கள் எதிர் நோக்கும் ஆறு முக்கிய விடயங்கள் சம்பந்தமாக மாணவர் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினார்கள். (12ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.இல் சிறை உடைப்பு; இரு கைதிகள் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா சிறைச்சாலை உடைக்கப்பட்டு இரு சிறைக்கைதிகள் தப்பியுள்ளனர்.நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் இந்த சிறையுடைப்புச் சம்பவம் நடந்துள்ளது.

சிறையில் விளக்கமறியலில் இருந்துள்ள இருவருடன் வெளியிலிருந்து உள்நுழைந்த இருவரும் இணைந்து கைத்துப்பாக்கி மூலம் சிறைத்துறை அதிகாரிகளை மிரட்டி சிறையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பின்னர் கொழும்புத்துறை சாலையில் நிறுத்தப்பட்டிருந்த உந்துருளியில் அவர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட மணாளன் மற்றும் பருத்தித்துறை கடற்பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

# திருநெல்வேலியில் பொலிசார் மீது சூடு ஒருவர் பலி ; மற்றொருவர் காயம்!

## பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் சிறிலங்கா பொலிசார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிசார் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார். இதனை அடுத்து அப்பகுதியில் திரண்ட சிறிலங்கா பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.45 மணிக்குத் திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்றது. இதில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எஸ். சேனா நாயக்க (வயது -38) என்ற பொலிசாரே படுகாயமடைந்து பின் உயிரிழந்தவராவார்.

சுடப்பட்ட பொலிசார் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (12ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுக்களால் சிறுவர்கடத்தல்; உடனடி விசாரணைக்கு வற்புறுத்தல்

சிறிலங்கா துணை ஆயுதக் குழுக்களால் தமிழ் சிறுவர்கள் கடத்தப்பட்டு கட்டாயப் பயிற்சி வழங்குவது தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக்கொலைகளைச் செய்யுமாறு வற்புறுத்துவது தொடர்பாகவும் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச தமிழர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

சிறுவர்களும் ஆயுத முரண்பாடுகளுக்குமான செயலாளர் நாயகத்தின் சிறப்புப் பிரதிநிதிக்கு சர்வதேச தமிழர் ஒன்றியம் அனுப்பி வைத்த அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத் துணை ஆயுதக் குழுக்களால் கடத்தப்படும் சிறுவர்கள் கட்டாய பயிற்சிக்காக சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பயிற்சியை முடித்ததும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக கொலைகளைச் செய்யுமாறும் வற்புறுத்தப்படுகின்றனர். (1[illegible]ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் கண்காணிப்புக் குழுவின் ஐரோ.ஒன்.தலைவர் யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் வாக்கெடுப்புக்களை நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜோன் குஷ்கைன் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்குடாநாட்டிற்கு வருகைதந்த இவர் யாழ்.அரச செயலகத்தில் வைத்து யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை (12ஆம் பக்கம் பார்க்க)

# தனது கொள்கையை முன்னெடுப்போருக்கு வாக்களிக்க சந்திரிகா கோரிக்கை!

(கொழும்பு)

தனது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் ஒருவருக்கு வாக்களிக்க வேண்டுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குளியாப்பிட்டியில் தெரிவித்த கருத்துத் தொடர்பாக ஆராய வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி என்ற வகையில் சனாதிபதி தனது கட்சி சார்பாக போட்டியிடுபவருக்கே வாக்களிக்கும்படி கேட்டிருக்க வேண்டும்.

எனினும் சனாதிபதியின் கொள்கைகளுக்கு எதிரான செயற்பாடுகளையே கட்சியின் வேட்பாளர் மேற்கொண்டுள்ளதாக தயாசிரி ஜயசேகர தெரிவித்தார்.

பிரதமர் அடிப்படைவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததைஅடுத்து சிறிலங்கா கட்சியினுள் மாறுபட்ட கருத்துக்கள் கிளம்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நேரடிவிவாதம் நாளை மறுதினம்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு இடையிலான நேரடி விவாதம் நாளை மறுதினம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்த விடயம் தொடர்பாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதிநிதியான மிலிந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு



முல்லை மணலாறு மாவட்ட சிறப்புத்தளபதி லெப்.கேணல் அன்புதாய அவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவுப் பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## வர்விளம்பரம்

### Wep Site Designing

உங்களது வியாபார நிறுவனங்களை சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்,வியாபார நிறுவனத்தின் பெயரில்

**இணையத்தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்**

***தொடர்புகட்கு:***

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி

(சி.13074)



## விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள பென்ரியம் IV கணினி டொட்மற்றிக்பிறிண்டர் (Epson 1120-A4) லெமனேற்றிங் மிசின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு ICS கணனி பயிற்சி நிலையம், இலங்கை வங்கி அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. பார்வையிடும் நேரம் மாலை 5.00 - 8.00மணிவரை. (6917)


## நினைவு நாள் நிகழ்வு

முல்லை மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி லெப்.கேணல் அன்புவின் (தாடி) 12 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு இன்று குமுழமுனையில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குமுழமுனை மக்களினால் இந்த நினைவு நாள்நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடத்தப்படவுள்ளதாக குமுழமுனைப் பிரதேச பொறுப்பாளர் பரிதி தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெரிவத்தமை குறிப்பிடத்தக்கது. (20)

## பதிவினை மேற்கொள்க

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் 2006 ஆம் ஆண்டுக்கான புதிய ஆங்கில பாடத்திட்டம் ஆரம்பமாகவுள்ளது. எனவே இப்புதிய வகுப்பில் சேரவிரும்பும் மாணவ மாணவிகளை இம்மாத இறுதிக்குள் பாடசாலை நேரத்தில் விண்ணப்பத்தினை பதிவு செய்யுமாறு வட்டக்கச்சி மகாவித்தியாலய முதல்வர் கேட்டுக்கொள்கின்றார். (12)

# தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் வவுனியா செல்வர்

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கவென சர்வதேச கண்காணிப்பாளர்கள் வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவிற்கு வருகை தரும் இவர்கள் தேர்தல் முடிந்த பின்பும் இரு தினங்கள் வரை வவுனியாவில் தங்கியிருந்து தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே வவுனியாவிற்கு வந்து தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# முன்பள்ளிகளின் கல்வி வளர்ச்சியினை முன்னிட்டு பாதுகாப்பு ஆண்டு பிரகடனம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்குக் கிழக்கு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் முன்பள்ளிகளின் கல்வி வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு கடந்த 01.11.2005 அன்று பாதுகாப்பு ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் 31.12.2006 ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் முன்பள்ளி கல்வி வளர்ச்சிக்கான பல வேலைத்திட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக முன்பள்ளி ஆசிரியர்களின் நலன்பேணல், முன்பள்ளி பௌதீகவள புனரமைப்பு அபிவிருத்தி, முன்பள்ளி சமூக விழிப்புணர்வு ஆகியவற்றினை நோக்காகவும்,முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு உயர்வு, மண்கொட்டகையற்ற முன்பள்ளிகளை உருவாக்குதல், தற்காலிக முன்பள்ளிகளைப் புனரமைத்தல், நிரந்தர முன்பள்ளிகளுக்கு ஏற்பாடு செய்வதனைக் குறிக்கோளாகக் கொண்டும், எதிர்கால சந்ததியாகிய சிறார்களின் கல்வி உடல் உள அபிவிருத்தியை பேணுவதுடன் சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கும், சமூக மயமாக்கலின்வழிகாட்டலுக்கும், ஏற்ற சிறுவர் சமூகத்தை ஒப்படைப்பதுடன் முன்பள்ளி ஆசிரியர்களின் சேவையை, அவர்களது அர்ப்பணிப்பினைத் தொடராக நிலைநிறுத்துவது போன்ற தூர நோக்குடனும் வேலைத்திட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதென தெரிவித்துள்ளனர். (சோ)



கரைச்சிப் பிரதேசசபையினரால் கட்டாக்காலி நாய்கள் பிடித்தழிக்கும் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் கிளிநொச்சி நகரப்பகுதியில் மேற்படி சபை ஊழியர்களினால் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு வருவதனை படத்தில் காணலாம். (படம் –சோதி)


## திருமண அழைப்பிதழ்





அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான பார்த்திபவருடம் ஐப்பசி 26 ஆம்நாள் (12.11.2005) சனிக்கிழமை இரவு 8.24 மணிமுதல் 9.05 மணி வரையுள்ள சுப முகூர்த்தவேளையில்

எமது கனிஷ்ர புத்திரன்
திருநிறைச்செல்வன்
**தவேந்திரராசா (சிறி)**
அவர்கட்கும்

எமது கனிஷ்ர புத்திரி
திருநிறைச் செல்வி
**மதனகுமாரி (மதனி)**
அவர்கட்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திரு.திருமதி. இரத்தினம் கிளி.
வேனுயன் திரையரங்கு,
தொட்டியடி ஒட்டுசுட்டான்.

"இருவீட்டார் அழைப்பு"

திருமதி. கணபதி,
தினேஸ் திரையரங்கு,
கற்சிலைமடு ஒட்டுசுட்டான்.

தகவல்:- சகோதரன்:-
விபுலன் (சசி)

(6642)


## மாவீரர் நாளை முன்னிட்டு ஓவியப்போட்டி

(அறிவகம் செய்தியாளர்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் தமிழீழ நுண்கலைக் கல்லூரியினால் பாடசாலை மாணவர்களுக்கும், தனியாருக்குமான ஓவியப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

விடியலை நோக்கி, அணையாத தீபங்கள் என்னும் போட்டித் தலைப்புக்களுடன் பாடசாலை மாணவர்களுக்கும், வீரத்தின் விழுதுகள், மலரும் தமிழீழத்தில் என்னும் தனியார்களுக்கான போட்டித் தலைப்புடனும் மேற்படி ஓவியப் போட்டி நடைபெறவுள்ளது.

ஆக்கங்களை 15.11.2005 இற்கு முன்பதாக தமிழீழ நுண்கலைக் கல்லூரி கிளிநொச்சி மாவட்டம் எனும் விலாசத்திற்கு அனுப்பிவைப்பதுடன் போட்டி விதிகள் நாளேடுகளில் வெளிவந்துள்ளதென கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (சோ)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 - 08 - 1925



மறைவு 10 - 11 - 2005

அமரர் இராமுப்பிள்ளை
நல்லதம்பி

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அவர்களின் தந்தை 10.11.2005 வியாழக்கிழமை திருகோணமலையின் மூதூர் பகுதியில் இறைபதம் எய்திய செய்தியைக் கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொறுப்பாளர்கள், பணியாளர்கள்
நடுவப்பணியகம்,
தமிழீழ சுகாதார சேவைகள், கிளிநொச்சி

(சி.13332)



## கண்ணீர் அஞ்சலி



எமது நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு. நல்லதம்பி இரட்ணம் அவர்களின் தந்தையார் 10.11.2005 வியாழக்கிழமை காலை திருகோணமலையில் இயற்கை எய்திவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருறும் எமது பணிப்பாளர் குடும்பத்தின் துயரில் நாமும் இணைந்து கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பணியாளர்கள்,
நலவாழ்வு அபிவிருத்திநிறுவனம்.

(சி.13327)

# தீவிரவாதத்திற்கு எதிரான புதிய சட்டதிருத்தம் படுதோல்வி; ரொனிபிளேயர் நெருக்கடியில்



(லண்டன்)

**தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோரை 90 நாட்கள் வரை காவலில் வைத்து விசாரிக்கும் புதிய சட்ட திருத்த மசோதாவை பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் அந்நாட்டு பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். மசோதா படுதோல்வியைத் தழுவியதால் பிரதமர் ரொனிபிளேயர் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளார்.**

கடந்த 1997ஆம் ஆண்டு பிரிட்டன் பிரதமராக ரொனி பிளேயர் தேர்ந்தெடுக்கப் பட்டார். தொடர்ந்து அவர் மூன்று முறை பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமர் ரொனிபிளேயர் தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா தொடங்கிய போரில் அந்நாட்டுக்கு ஆதரவு தெரிவித்தார். சமீபத்தில் பிரிட்டனில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அந்நாட்டு மக்களை பெரும் பீதியில் ஆழ்த்தின.

இந்நிலையில் தீவிரவாதி என சந்தேகிக்கப்படுவோரை 90 நாட்கள் வரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க வழிவகை செய்யும் சட்டத்திருத்த மசோதா ஒன்றை ரொனி பிளேயர் பிரிட்டன் பாராளு மன்றில் கொண்டுவந்தார். அந்த மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தற்போதுள்ள 14 நாட்களை வேண்டுமானால் 28 நாட்களாக அதிகரிக்கலாம். 90 நாட்கள் காவலில் வைத்து விசாரணை நடத்துவதற்கு அனுமதிப்பதே இம் மசோதாவாகும்.

எதிர்க்கட்சியினர் மற்றும் சிவில் உரிமைக் கழகங்களைச் சேர்ந்தவர்கள் "இது மனித உரிமைக்கு எதிரானது'' என இந்த மசோதாவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரொனிபிளேயர் கொண்டுவந்த மசோதா தோல்வியடைந்ததை அடுத்து அவர் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இந்நிலையில் ரொனிபிளேயர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எழுந்துள்ளது. கடந்த மூன்று முறை பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரொனிபிளேயரின் பதவிக்காலம் முடிவடையும் நேரம் நெருங்கிவிட்டது. 'இது ஒரு முடிவின் தொடக்கம்'' என அந்நாட்டு பத்திரிகைகள் வர்ணித்துள்ளன.



ஜோர்தான் தலைநகர் அம்மானில் மூன்று நட்சத்திர விடுதிகளில் கடந்த புதன் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 67 பேர் பலியாகினர். பலியானவர்களின் உடல்கள் விடுதி வெளிப் புறத்தில் சிதறிக் காணப் படுகின்றன.

## பூகம்பம் பாதித்த பாகி.பகுதிக்கு அமெரிக்க நிவாரண குழு செல்கிறது

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் பல்லாயிரம் பேர் பலியானார்கள் அங்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமெரிக்கா ரூபா.800 கோடி வழங்கியது. இதுதவிர தனியார் நிறு வனங்கள் மூலம் நிதி திரட்ட அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஏற்பாடு செய்துள்ளார்.

இது பற்றி ஆய்வு செய்வதற்காக நான்கு தொழில் அதிபர்களைக் கொண்ட பிரதிநிதி குழுவை பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்க ஜோர்ஜ் புஷ் முடிவு செய்தார் இந்த குழுவினர் நேற்று முன்தினம் அவரை சந்தித்துப் பேசி னார்கள். விரைவில் இந்தக் குழுவினர் பாகிஸ் தான் சென்று பூகம்பம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட இருக்கிறார்கள்.

## பாக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல் 33 பேர் உடல் சிதறிப்பலி; 19பேர் காயம்

(பாக்தாத்)

பாக்தாத்தில் விடுதி ஒன்றில் இரு தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் ஏழு பொலிசார் உட்பட 33 பேர் பலியாயினர். 19பேர் காயமடைந்தனர்.

பாக்தாத்தின் மத்திய பகுதியி லுள்ள விடுதி ஒன்றில் அதிகளவு பொலிசார் காலை உணவருந்துவது வழக்கமாகும்

இந்தப் பொலிசாரை குறிவைத்து நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் விடுதிக்குள் புகுந்த இரு தீவிரவாதிகள் திடீரென தங்கள் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் விடுதியில் காலை உணவு உண்டுகொண்டிருந்த ஏழு பொலிசார், பொது மக்கள் 26 பேர் உள்ளிட்ட 33பேர் பலியாகினர். 19பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் விடுதி முழுவதும் சேதமடைந்தது.



பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் சார்க் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு நடந்த போது.

## மூன்று நட்சத்திர விடுதிகளில் குண்டுத் தாக்குதல் ஜோர்தானில் 67 பேர் பலி ;1 15பேர் படுகாயம்

(அம்மான்)

ஜோர்தான் தலைநகர் அம்மானில் மூன்று நட்சத்திர விடு திகளில் தற்கொலை படையினர் பயங்கரத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் 67 பேர் பலியானார்கள். 115 பேர் காயமடைந்தனர்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் கிராண்ட் ஹயாத் விடுதி கள், ரெட்டிசன் எஸ்ஏஎஸ், டேய்ஸ் இன் ஆகிய மூன்று நட்சத்திர விடுதிகள் உள்ளன. இந்த நட்சத்திர விடுதிகளில் திருமணங்கள், ஆடம்பர விருந்துகள், கேளிக்கை நடனங்கள் உட்பட பல்வேறு ஆடம்பர நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கடந்த புதன்கிழமை இரவு 9.00மணியளவில் இந்த மூன்று நட்சத்திர விடுதிகளில் திடீரென்று மனித குண்டு தற்கொலை படைத் தாக்குதல் நடந்தது. அப்போது பயங்கர தீ பிடித்ததுடன், கட்டடமே இடிந்து விழுந்தது. இதில் 67 பேர் கொல்லப்பட்டனர்.

115க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். விடுதிகள், முழுவதும் இரத்தம் வழிந்து ஓடியது. விடுதிகளில் இருந்தவர்கள் பீதி அடைந்த நிலையில் இருந்தார்கள்.

இந்தத் தாக்குதல் நடந்தபோது ஒரு நட்சத்திர விடுதியின் அருகே உள்ள உணவு விடுதியில் பிரான்சு நாட்டு அதிகாரிகள் சிலர் உணவுண்டு கொண்டு இருந்தார்கள். அவர்கள் இந்த தாக்குதலை நேரில் பார்த்தார்கள். அவர்கள் கூறியதாவது.

தீப்பந்து ஒன்று பறந்து வந்து விடுதி மாடியில் விழுந்தது. அப்போது பயங்கரச் சத்தம் கேட்டது. அதன் பிறகு புகை மண்டலமாக காட்சி அளித்தது. வேறு ஒன்றுமே தெரியவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## புஷ்ஷை தலாய்லாமா சந்தித்தார்



(வோஷிங்டன்)

திபெத்தின் புத்தமத குரு தலாய்லாமா 10நாள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். கடந்த புதன் அன்று வெள்ளை மாளிக்கு சென்று சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சை சந்தித்தார். ஜோர்ஜ் புஷ்சும், அவரது மனைவி லாராவும் தலாய்லாமாவை வரவேற்று அழைத் துச் சென்றனர்.

இரு தலைவர்களிடையே நடந்த பேச்சு வார்த்தை விவரம் வெளியிடப்படவில்லை. என்றாலும் திபெத்துக்கு சுயாட்சி வழங்க சீன அதிபரிடம் வலியுறுத்தும்படி ஜோர்ஜ் புஷ்சிடம் அவர் கேட்டுக்கொண்டதாக தெரிகிறது.

ஜோர்ஜ் புஷ் இம்மாதக் கடைசியில் சீனா செல்ல இருக்கி றார். இந்த நிலையில் அவரை தலாய்லாமா சந்தித்து பேசி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. புஷ் தலாய்லாமாவுடன் சந்திப்பு நடத்துவதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து இருந்தது. ஆனால் அதை ஜோர்ஜ் புஷ் புறக்கணித்து விட்டார்.

## காபூலில் 16 பேர் பலி

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் நடந்தசாலை விபத்தில் 16 பேர் பலியாயினர். மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர். இவர்கள் பயணம் செய்த பாரவூர்தி நதியில் விழுந்ததால் இச்சம்பவம் நிகழ்ந்தது.

## பாலி குண்டு வெடிப்பு தீவிரவாதி இந்தோனேஷியாவில் சுட்டுக்கொலை

தென்கிழக்காசியப்பகுதிகளில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கு காரணமான தீவிரவாதி அசாரி பின் ஹுசேன் நேற்று முன்தினம் இந்தோனேஷியப்பொலிசாருடன் நடந்த சண்டையில் பலியானார். அவர் பதுங்கியிருந்த வீட்டை பொலிசார் சுற்றி வளைத்த போது வீட்டிற்குள் குண்டு வெடித்து அவர் இறந்து விட்டதாக முதலில் தகவல் வெளியானது. எனினும் பொலிசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இறந்ததாக பின்னர் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் இயங்கி வரும் ஜெம்மா இஸ்லாமியா என்ற தீவிரவாத அமைப்பு ஒசாமா பின்லேடனின் அல்ஹைதாவுடன் தொடர்புடையது ஜெமா இஸ்லாமியா அமைப்பைச்சேர்ந்தவர்கள் அசாரி பின் ஹுசேன், நூர்தின் டாச் இருவரும் மலேசியாவை சேர்ந்தவர்கள். இந்தோனேஷியாவிலுள்ள பாலி நகரில் 2002 ஆம் ஆண்டு நடந்த குண்டுத் தாக்குதலில் 202 பேர் இறந்தனர். இதன் தொடர்ச்சியாக பல வெடிகுண்டு சம்பவங்கள் நடந்தன. கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி பாலி நகரில் மீண்டும் தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. இதில் 22பேர் இறந்தனர்.

இந்த குண்டு வெடிப்புகளுக்கு அசாரியும் டாப்பும் தான் காரணம் என இந்தோனேஷிய பொலிசார் திட்டவட்டமாக கூறினார். இதையடுத்து அவர்கள் இருவரையும் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டது. தென்கிழக்காசிய பகுதியில் பயங்க ரமான தீவிரவாதியாக அசாரி கருதப்பட்டார்.



அமெரிக்க நியூ ஜெர்சி மாகாணத்தில் வேருடன் சாய்க்கப்பட்டிருக்கும் கிறிஸ்மஸ் மரத்தின் தோற்றமே இது. அதன் உயரம் 74 அடி எடை 7 தொன்.

-அரசு மருந்துப்பொருட்கள் அனுப்பாததால்-

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் மருந்துப்பொருட்கள் தீர்ந்தன

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் கொழும்பு மருத்துவக் களஞ்சியத்திலிருந்து அனுப்பிவைக்கப்படுவதில் பாரிய குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் முக்கிய பல மருந்துவகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருவதாகத் தெரியவந்துள்ளது.**

மேற்படி விடயம் தொடர்பாக கிளி. மாவட்ட வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தினருடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில;


கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கென ஒவ்வொரு காலாண்டுக்குமான மருந்து ஒதுக்கீட்டின் பிரகாரம் கொழும்பு மருந்துக்களஞ்சியத்திலிருந்து முழுமையாக மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படுவதில்லையெனவும் சில மருந்துகள் 20 வீதம், 40வீதம் என்று அனுப்பிவைக்கப்படுவதுடன் ஒரு சில மருந்துகள் முற்றாக அனுப்பி வைக்கப்படுவதில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.அத்துடன் இவ்இறுதிக்காலாண்டுக்கான மருந்து வகைகள் ஒன்றரைமாதகாலமாகியுள்ள நிலையிலும் இதுவரை அனுப்பி வைக்கப்படாமையின் காரணமாக நோயாளர்களுக்கான மருந்துவகைகளில் பல முற்றாக தீர்ந்துள்ளமையினால் நோயாளர்கள் மருந்துகளுக்கான சிட்டைகளைப் பெற்று தனியார் மருந்தகங்களில் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக உயர் குருதி அழுத்தத்திற்கான கபரோபிரில், ஏனெலாபிரில், அமைனோடிப்பின்,சோபிடேட், குடற்புண்ணிற்கான வெமற்றடீன், ஒமிற்பிறசோல், அல்றொக்ஸ், நீரிழிவு நோய்க்குரிய இன்சுலின், லென்டேசொலியில், முட்டு, ஆஸ்மாநோய்க்குரிய பிரிட்னிசலோன், அஸ்தலீன்,கண்டல் கழலை நோய்க்கான தைரொட்சின், மூட்டுவாதத்திற்கான டைக்னோபனக்ஸ், புறூபன், இன்டோசிட், மயக்க மருந்துகள் ஸ்கோலின், மாக்கேன், அலப்பேன், தயோபென், ரென்சோடியம். சத்திரசிகிச்சைக்குரிய ஊசிகள் சிறிஜ், வென்புலோன், கடீற்றர், தொற்று நீக்கிக்கான லைசோல், நுண்ணுயிர் கொல்லிகள் அமெக்சிலின், குளோக்சலின், பாம்புக்கடிக்கான மருந்து அன்ரிசினெக்மீனம், மன நோய்க்கான ஒலன்சட்பீன், புலுஎக் சற்றின் ஆகிய மருந்துகளுடன் வைத்தியசாலைப் பாவனைக்கான கையுறைகளும் முற்றாக தீர்ந்துள்ள தாகவும் தெரிவித்துள்ளனர் இதன் காரணமாக கிளி.மாவட்ட வைத்தியசாலையில் பாரிய மருந்துத் தட்டுப்பாடு நிலவியுள்ளதுடன் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் செயலகத்தில் மாதாந்தம் நடைபெறும் அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30



மணிக்கு பிரதேச செயலர் நா.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. அபிவிருத்திகள் சம்பந்தமானதும் 2006இற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றியதுமான பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. இந்நிகழ்வில் அரச திணைக்களங்கள்- துறைசார்ந்த நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (24)

# உருத்திரபுரம் அ.பு.கழகத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் அகதிகள்- புனர்வாழ்வுக்கழக புதிய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் இந்த நிறுவனம் கிளி. உருத்திரபுரத்திலுள்ள ஆறு கிராமங்களை உள்ளடக்கியதாகும். இதன் இயங்கு பரப்புக்குள் ஆறாயிரத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். இந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டுவரும் உருத்திரபுரம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனக்கான நிரந்தரகட்டடம் எதுவும் இன்றி தனியார் வீடுகளிலும், காணிகளிலும் மிகுந்த நெருக்கடிகளின் மத்தியில் மக்களுக்கான தனது சேவையைச் செய்து வந்தது.

இந்த நிலையில்இதற்கான நிரந்தரக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிதியுதவியை வழங்கியிருந்தது.




இதன் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் 12.15 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடியில் ஆரம்பமானது.

இதில் மங்கல விளக்கை உருத்திரபுரம் சிவநகர் கிராம உத்தியோகத்தர் வைத்திஸ்வரமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டக் கண்காணிப்பு ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக்கொடியை கிளி.மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் பூங்குன்றன் ஏற்றிவைத்தார், உருத்திரபுரம் அகதிகள் புனர்வாழ்வுக்கழகக் கொடியை அதன் செயலாளர் சிறீதேவன் ஏற்றினார்.

இவற்றைத்தொடர்ந்து பொது ஈகச்சுடரை த.பு.கழக நடுவப்பணியக திட்டமிடல் பிரிவைச்சேர்ந்த சதீஸ், அக்கராயன் அபிவிருத்திபுனர் வாழ்வுக்கழக இணைப்பாளர் சுதர்சன் உள்ளிட்டவர்கள் ஏற்றிவைத்தனர். நிறுவன பெயர்ப்பலகையை கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன நித்தியானந்தம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

புதிய கட்டடத்தை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். நிறுவனத்தின் நிதிப்பகுதியை வணக்கத்துக்குரிய பிதா மதுரநாயகம் திறந்து வைத்தார்.இணைப்பாளர் அலுவலகத்தை த.பு.கழக உதவிப்பணிப்பாளர் றீகன் திறந்துவைத்தார். திட்ட அலுவலகத்தை கிளி. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை திறந்து வைத்தார் .

தொடர்ந்து உருத்திரபுரம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் இ.பரஞ்சோதி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் ஆசியுரையை வணபிதா மதுரநாயகம், சிறப்புரைகளை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழர்புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் றீகன் கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை, நிறுவன இணைப்பாளர் சவுந்தர் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றி உரையை செயலாளர் நிகழ்த்தினார். (லோ,தீ)

# தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு விழா - 2005

(மல்லாவி)

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும், 100 புள்ளிகளுக்குக் கூடுதலாகப்பெற்ற மாணவர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் பாலிநகர் ம.வியில் பள்ளி முதல்வர் து.யேசுதானந்தர் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் சித்தி பெற்ற மாணவர்களான க.கபிலேஷ், ஜெ.ஜெனனி, சி.ஜெய்னோதன் ஆகியோருடன் 100 புள்ளிகளுக்குக் கூடுதலாகப் பெற்ற ஈ.சஞ்சீதா, ஜெ.கிதுஸ்சினி, அ. கீர்த்திகா ஆகிய மாணவர்களைப் பாராட்டி அதிபர், ஆசிரியர்களான செ.ஜெயகாந்தன், திருமதி வி.சசிகலாதேவி ஆகியோரும், பெற்றோர்சார்பில் திருமதி.ஜெ.வசந்தியும் சிறப்புரைகளை வழங்கினர்.

விழாவின் சிறப்புவிருந்தினராக முல்லை.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடரும் கலந்து சிறப்பித்தார். இறுதியாக பாடசாலையின் பிரதி அதிபர் செல்வி.சி.கந்தசாமியின் நன்றியுரையுடனும், விருந்துபசாரத்துடனும் நிகழ்வு நிறைவு பெற்றன.

# சைவநெறிப்போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர் விபரம்

(கிளிநொச்சி)

கிளி.மாவட்ட தரம் 11 மாணவரிடையே திருநெறிக்கழகத்தால் அண்மையில் நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டிப்பரீட்சையில் மாவட்டத்தில் கூடுதலான புள்ளி பெற்ற மாணவரின் பெயரும் பாடசாலையின் பெயரும் வெளியிடப்பட்டுள்ளன.

செல்வி.இ.றஜனி-கிளி.திருவையாறு ம.வி, செல்வி மு.துளசிகா-கிளி.வட்டக்கச்சி ம.வி, செல்வி தி.பிரசாந்தி கிளி.வன்னேரிக்குளம் ம.வி, செல்வி பூ.பிரமிளா-கிளி.திருவையாறு ம.வி, செல்வி க. நிறோஜா-கிளி. முழங்காவில் ம.வி, செல்வன் ப.கஜன்-கிளி.இராமநாதபுரம் ம.வி, செல்வி. மு.துர்க்காயினி-கிளி.இராமநாதபுரம் ம.வி, செல்வி கு.கபிலா-கிளி. உருத்திரபுரம் ம.வி, செல்வி தி.யாழினி-கிளி.பரந்தன் இந்து ம.வி, செல்வன் அ.அனுருத்திரன்- கிளிநொச்சி ம.வி, செல்வி. செ. துளசி-கிளி.திருவையாறு ம.வி.

சிறப்புப்புள்ளி பெற்ற மாணவருக்குரிய பரிசளிப்பு நிகழ்வு 20.11.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. இரண்டுமணிக்கு கிளி.கிளிநொச்சி ம.வி யில் நடாத்த ஏற்ற ஒழுங்குகள் செய்துள்ளதாக கழகத்தலைவர் வே.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

# 5000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டது

5000 பனம் விதை நடுகை மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு கோயில் வளாகத்தில் கடந்த புதன்கிழமை அன்று மடுப்பிரதேச பொருண்மிய இணைப் பாளர் வீ.குமார் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக ஒரு நிமிட அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை மடு உதவி அரசாங்க அதிபர் மடு கோயில் பங்குத்தந்தை தமிழ் பரிதி ஆகியோர் ஏற்றிவைத்தனர். கருத்துரைகளை மடு உதவி அரசாங்க அதிபர், கோவில் பங்குத்தந்தை ஆகியோர் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து பனம்விதைகள் நாட்டிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பொதுமக்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (18)



*கிளிநொச்சி கணேசபுரம் வீதியில் உள்ள முதலாவது ஒழுங்கைப் பாலம் ஒன்றின் மீது கிரவல் ஏற்றியபடி பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனம் பாலம் திடீர் என இடிந்ததால் அதனுள் சிக்குண்டு போயுள்ளதைப் படத்தில் காணலாம். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு நடைபெற்றது.* (படம்-லோ.த)

# விழாக்குழு தெரிவு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை உணர்வெழுச்சியுடன் நடாத்துவதற்கான முன்னோடிக கலந்துரையாடல் நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை **பி.ப.** இரண்டு மணியளவில் கற்சிலை மடு அ.த.க. பாடசாலையில் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க பொதுமுகாமையாளர் தனபால்ராஜ் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றதுடன், விழாக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. கோ.சிவகுமார் தலைவராகவும் யோசப்ஸ்ராலின் செயலாளராகவும் மேலும் பத்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (05)

# வலி.வடக்கில் முன்னரங்க நிலைகளை பலப்படுத்தும் சிறிலங்காப் படையினர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கநிலைகள் பெருமெடுப்பில் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.**

குறிப்பாக வலிகாமம் வடக்கு பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகள் உள்ள சேந்தான்குளம், தெல்லிப்பழை, கட்டுவன், வளலாய் போன்ற பகுதிகளில் இவ்வாறான பலப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இராணுவத்தினர் புல்டோசர்கள் மூலம் மண் அணைகளைப் பலப்படுத்தி வருவதுடன், முட்கம்பி வேலிகளைப் புனரமைத்து அவற்றில் மின் பாய்ச்சுதல் மற்றும் காவலரண்களைப் புதிதாக அமைத்தல் பழைய காவலரண்களைப் புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

என்றுமில்லாதவாறு இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக மேற்கொண்டுவரும் இந்நடவடிக்கைகளால் வலிகாமம் வடக்கு முன்னரங்க நிலைகளை அண்டிய பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்து வாழும் மக்களிடையே யுத்தபீதி ஏற்பட்டுள்ளது. (33)

## யாழ். மாவட்ட இளைஞர் அணிக்கான விசேட இராணுவப் பயிற்சி





யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே இராணுவப் பயிற்சியினை முடித்து வெளியேறிய இளைஞர்களுக்கான விசேட பயிற்சித் திட்டம் ஒன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இச்சிறப்புப் பயிற்சிபெறும் 250 பேர் கொண்ட முதலாவது அணியையே படங்களில் காண்கிறீர்கள். எதிர்வரும் காலத்தில் யுத்தம் ஏற்படும் பட்சத்தில் விடுதலைப் போராளிகளுடன் இணைந்து எமது தேசத்தை விடுவிக்கும் போராட்டத்தில் உதவிப் படைகளாகச் செயற்படும் வகையிலேயே பயிற்சி வழங்கப்படுகின்றது.

## திக்கம் வடிசாலையின் சாராய உற்பத்தி இவ்வாண்டு பாரிய வீழ்ச்சி

யாழ்.திக்கம் வடிசாலையின் சாராய உற்பத்தி என்றுமில்லாதவாறு இவ்வாண்டில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது என்று அவ்வடிசாலையின் பொதுமுகாமையாளர் கூறியுள்ளார். யாழ் குடாநாட்டில் பனை,தென்னை வளம் சார்ந்து வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டினை மையமாகக்கொண்டே இத்திக்கம் வடிசாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

எனினும் இவ்வாண்டில் யாழ். குடாநாட்டில் கள்ளு உற்பத்தியில் பாரியவீழ்ச்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாகவே திக்கம் வடிசாலையின் சாராய உற்பத்தி அளவு வீழ்ச்சி கண்டுள்ளது என திக்கம் வடிசாலையின் முகாமையாளர் கூறினார்.

இதேவேளை யாழ்.குடாநாட்டின் கள்ளு உற்பத்தி அளவு பாரியளவில் வீழ்ச்சிகாண்பதற்கு இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பனை, தென்னை வளம் மிகுந்த பகுதிகளைப் படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமையை பிரதானமான காரணமென வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## யாழ்.குறிகாட்டுவான் பாலத்தை புனரமைப்புச்செய்ய யப்பான் அரசு 25 மில்லியன் ரூபா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்திலுள்ள குறிகாட்டுவான் பாலத்தை புனரமைப்புச் செய்வதற்கென யப்பான் 25மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித் துள்ளார்.

தீவகத்தில் வேலணை-குறிகாட்டுவான் வீதியிலுள்ள மேற்படி பாலம் சேதமடைந்து காணப்படுவதால் இப்பகுதியூடாக போக்குவரத்துச் செய்வது மிகவும் அபாயகரமான தொன்றாகக் காணப்படுகிறது.

இதனால் நாளாந்தம் ஆயிரக் கனக்கானோர் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் இப்பாலத்தை புனரமைப்புச் செய்து மக்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டி மக்களால் விடுக்கப்பட்டுவந்த தொடர் கோரிக்கைகளின் விளைவாகவே இப்பாலத்தைப் புனரமைப்புச் செய்வதற்காக யப்பான் 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என பொறியியலாளர் சுதாகர் மேலும் கூறினார்.

இந்நிதிமூலமான பாலப் புனரமைப்புப் பணிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார். (33)

## புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் இதய மருத்துவம், பொது மருத்துவ சிகிச்சை

(புதுக்குடியிருப்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து வருகைதரும் இதய மருத்துவ சிகிச்சை நிபுணரினாலும், வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் பொது மருத்துவசிகிச்சை நிபுணரினாலும் புதுக்குடியிருப்பு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் நாளை காலை 8.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை நோயாளர்கள் பார்வையிட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறிப்பாக மாரடைப்பு, இதயக் கட்டமைப்பில் பாதிப்பு , இருதய வால்வுகள் பாதிப்பு உயர்குருதி அழுத்தம், தொய்வு, நெஞ்சு நோ போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட கருவிகளின் துணைகொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பு சத்திரசிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் தொடர்புகொள்ளும்படி பணிப்பாளர் அறியத்தருகின்றார்.

## நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நியமனக் கடிதங்களைப் பெறக்கோரல்

கிளிநொச்சி வலயத்தில் பட்டதாரிப்பயிற்சியாளர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் நியமனக்கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்கள் இதுவரை நியமனக்கடிதத்தினைப் பெற்றுக்கொள்ளவில்லை. உடனடியாக இந்நியமனக்கடிதத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுக்கொள்கின்றார்.

செல்வி. விஜயகீதா இரத்தினம், திருமதிகோமதி பிரபாகரன், செல்வி ஜரின் சுபத்திரா ஜீவரத்தினம், செல்வி.சிவப்பிரியா சண்முகலிங்கம், செல்வி. சுகந்தினி செல்வராசா, திருமதி ஆன்லுமினா ஜெயதாசன், செல்வி. எவிலின் ஜெனியற்றா கோமகன், திருமதி நந்தினி கோபாலகிருஸ்ணன், செல்வி. மேரி வலன்ரீனா ஸ்ரனிஸ்லாஸ், அருட்சகோதரி கிறேஸ் மேரி ஸ்ரனிஸ்லாஸ், செல்வி. ஜெகதீஸ் செல்வ பெருமாள், திருமதி. விஜயா ஞானேந்திரன், திருமதி. கலைஞானவதி சுரேந்திரன், சபாரத்தினம் லதீஸ்குமார், சயனொளிபவன் முகுந்தன், பொன்னம்பலம் [illegible] சீலன் ஆகியோருக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## கண்டெடுப்பு

குகனேந்திரராசா, தனலட்சுமியம்மா, (அராலி கிழக்கு, அராலி வட்டுக்கோட்டை) என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்

## சாவகச்சேரி வைத்தியசாலையில் மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு

யாழ். தென்மராட்சி சாவகச்சேரி வைத்தியசாலையில் மருந்துப் பொருட்களுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்பட்டுவருவதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட பிரதேசமான தென்மராட்சியில் வாழும் முழுமக்களினதும் வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரேஒரு வைத்தியசாலையாக சாவகச்சேரி வைத்தியசாலை காணப்படுகிறது.

அத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்வோர் தொகை மாதாந்தம் அதிகரித்து வருவதனால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக வருவோர் தொகையும் அதிகரித்தே வருகிறது.

எனினும் நாளாந்தம் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோர் தொகை அதிகரித்துள்ளபோதும் அத்தொகைக்கேற்றவிதத்தில் வைத்தியசாலைகளுக்கான மருந்துப்பொருள் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

காலத்துக்குக்காலம் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாமை காரணமாகவே இவ்வாறான மருந்துப்பொருள் தட்டுப்பாடு அவ்வப்போது ஏற்பட்டு வருகிறது என வைத்தியசாலை அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் காரணமாக வைத்திய சிகிச்சை செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படும் நிலைமையும் உள்ளதாக அவர்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர். (33)

## தொண்டைமானாறு கடற்கரையில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்- தொண்டைமானாறு கடற்கரை ஓரத்தில் ஆண் ஒருவரது சடலம் கரை ஒதுங்கியுள்ளது. நேற்று முன்தினம் முற்பகல் கரை ஒதுங்கிய இச்சடலம் யாருடையது என்பது குறித்து அடையாளம் காணப்படவில்லை. சடலமாகக் காணப்படுபவர் சுமார் 40தொடக்கம் 45 வயது மதிக்கத்தக்கவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி மீனவர்களால் கொடுக்கப்பட்ட தகவல் ஒன்றை அடுத்து தொண்டைமானாறு கடற்கரைக்குச் சென்ற பொலிசார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு வந்த மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

குடாநாட்டில் அண்மைக்காலமாக கரையொதுங்கி வரும் அடையாளம் காணப்படாத சடலங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் அண்மையில் சடலம் ஒன்று கரையொதுங்கியிருந்தது தெரிந்ததே. இதுவரை யாழ்.குடாநாட்டில் அடையாளம் காணப்படாத எட்டு சடலங்கள் ஓரசிலைவில் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(32)

## யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு நல்லின உருளைக்கிழங்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு விவசாயிகளுக்கு நல்லின விதை உருளைக்கிழங்குகள் விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ்குடாநாட்டு உருளைக்கிழங்குச் செய்கையாளர்களது தொழிற்றுறையினை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டே இவ்விதை உருளைக்கிழங்குகள் விநியோகம் செய்யப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களூடாகவே இவை விநியோகம் செய்யப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் அதிக விளைச்சலையும் சந்தை வாய்ப்பினையும் தரக்கூடிய "டிசிரி", "அலோவா" போன்ற உருளைக்கிழங்கு இனங்களைச் சார்ந்த விதைக் கிழங்குகளே விநியோகிக்கப்படவுள்ளன என்று கமநல சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது. (33)

## பணி நடைபெறாது

நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தல் காரணமாக இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை காணி மாவட்டப்பதிவகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகம், காணி, தொடர்பான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும்பணி நடைபெறமாட்டாது என்று யாழ்ப்பாண காணி மேலதிக மாவட்ட பதிவாளர் தெரிவித்துள்ளார். (37)

# வீட்டு முற்றமாகிறது விண்வெளி!

பூமியிலிருந்து 360 கி.மீ உயரத்தில் சர்வதேச விண்வெளி மையம் செயற்பட்டு வருகிறது. விண்வெளியில் ஒரு வீட்டைப்போன்று உள்ளது. இந்த விண்வெளி மையம். இங்கு இரு விஞ்ஞானிகள் நிரந்தரமாகத் தங்கி இருந்து ஆராய்ச்சி செய்கின்றனர். செர்ஜிகிரிகலேவ், ஜான் பிலிப்ஸ் ஆகியவர்கள். அந்த விஞ்ஞானிகள் வீட்டு முற்றத்தில் கிடக்கும் பொருட்களை வீட்டிற்குள் கொண்டு வந்து சேர்ப்பது போன்று சர்வதேச விண்வெளி மையத்தை விட்டு வெளியே வந்து வெளியே மிதந்து நீண்டகாலமாக விண்வெளியில் மிதந் தவை டிஸ்கவரி விண்கலம் புறப்பட்ட சில நாட்களுக்குள் இவர்கள் இந்த விண்நடையை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் விண்வெளி மையத்தில் இல்லாத நேரத்தில் அமெரிக்காவின் ஹூஸ்டானிலும் ரஷ்யாவின் மாஸ்கோவிலும் உள்ள விண்வெளி விஞ்ஞானிகள் அவர்கள் இருவரும் ஆற்ற வேண்டிய பணிகளைப் பூமியில் இருந்தவாறே கவனித்துக் கொண்டனர். செர்ஜ் ஜானின் விண்நடையின் முக்கிய நோக்கம், கிரகத்துக்கும் மனிதர்களை அனுப்பும் முயற்சியை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாஸா திட்ட மிட்டுள்ளது. ஆய்வு மையத்திற்குள் கொண்டு செல்வதற்கு முன்னதாக இந்தப் பொம்மையைச் சுற்றியிருந்த உறையை விஞ்ஞானிகள் பிரித்தனர். அதை விண்வெளியில் தூக்கி எறிந்தனர். மேலும் சாதனங்களை தூய்மைப்படுத்த பயன்படுத்திய துணிகளையும் தூக்கியெறிந்தனர் மேலும் ஒரு டிவி காமிராவைப் பொருத்தினர். அடுத்த ஆண்டில் விண்வெளி ஓடம் வரும் போது இது பயன்படுத்தப்படும். பல்வேறு

கொண்டிருந்த பல்வேறு சாதனங்களை மீண்டும் ஆராய்ச்சி மையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். இவை மாட்ரியோஷ்கா என்ற கதிரியக்கத்தை அளவிடும் பொம்மையை எடுத்து வருவது தான். மென்மையான பொருட்களினால் செய்யப்பட்ட அந்தப் பொம்மை சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு வெளியே கடந்த ஆண்டு வைக்கப்பட்டது. இதன் மூலம் கிடைக்கும் பல்வேறு முக்கிய தகவல்களை வைத்து நிலாவுக்கும் செவ்வாய்க் சாதனங்கள் மீண்டும் ஆய்வு மையத்துக்குள் கொண்டு செல்லப்பட்டதால் அவற்றை மீண்டும பூமிக்குஎடுத்துவர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

விண்வெளி எங்கோ எங்கோ இருக்கிறது என்று எண்ண வேண்டியதில்லை ஆமாம் அது நம் வீட்டு முற்றம் போல் ஆகிவருகிறது விஞ்ஞானிகளின் அரியமுயற்சியினால்.

## வெள்ளை இரவுகள்!

ரஷ்யாவில் மாஸ்கோ நகருக்கு அடுத்த பெரிய நகரம் லெனின் கிராட். இந்த நகரம் நேவா ஒஹா என்ற இரண்டு ஆறுகளின் முகத்து வாரத்தில் அமைந்துள்ளது. குளிர் காலத்தில் பகற்பொழுது மிகக் குறைவு, கோடையில் ஒரு விநோதமான நிகழ்ச்சியைக் காணமுடியும். ஜூலை 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை அங்கு இரவே இருக்காது. அதாவது இரவு முழுவதும் ஒரே வெளிச்சமாக இருக்கும். அந்தக் காலத்து, இரவுகளை வெள்ளை இரவுகள் என்பார். அந்நாட்களில் மக்கள் தூங்காமல் ஆடிப்பாடி மகிழ்வர் அவற்றைக் கண்டு களிக்க ஏராளமான வெளிநாட்டினர், சுற்றுலாப் பயணமாக வருகிறார்கள்.

## பெரிய அருங்காட்சியகம்

உலக அருங்காட்சியகங்களிலேயே மிகவும் பிரசித்தி பெற்றவற்றுள் ஒன்று வோஷிங்டனின் ஸ்மித் சோனியன் இன்ஸ்டிடியூ ன் அருங்காட்சியகம். இது 12 அருங்காட்சியகங்களை உள்ளடக்கியது. இங்கு 77 விண்கலன்கள் 12 மில்லியன் அஞ்சல் தலைகள், 35594 எலும்புக் கூடுகள், 4500 விண்கற்கள் எனப் பல பொருட்கள் காணப்படுகின்றன.



சிறுவர்களுக்கு நடனம் கற்பிக்க தற்போது ஆசிரியர்களைத்தேடி செல்லவேண்டியதில்லை. அதற்காக இயந்திர மனிதனை ஜப்பானின் ஹொண்டா நிறுவனம் தயாரித்துள்ளது. தற்போது சந்தையில் விற்பனையாகும் இதனைப் பணம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்.

## ஹம்மிங் பறவை

ஹம்மிங் பறவை இனத்தில் மட்டும் 300 வகைகள உள்ளன. பின்புறமாகவும் பறக்கக்கூடிய இவை ஒரே இடத்தில் பறந்தபடி வெகு நேரம் நிற்க முடியும்

## ரிப்பன் அருவி

கலிபோர்னியாவில் உள்ள ரிப்பன் அருவி 490 மீற்றர் உயரத்திலிருந்து ஒரே அருவியாக விழுகிறது.

## குறட்டை

சிலர் தூங்கும் போது குறட்டைவிடக் காரணம் நுரையீரலில் இருந்து வரும் காற்று உள்நாக்கில் பட்டு அதிர்வுகளை உண்டாக்குவதனாலாகும்.



இங்கு காணப்படும் புகைப்படக்கருவி சந்தேக நபர் ஒருவரைப் படம் எடுப்பதுடன் அவரின் முழு விபரங்களையும் பெற்றுத்தரக்கூடியதாகும், தன்னியக்க சக்தியினால் செயற்படும் இது, தற்போது உலக சந்தையில் விற்பனையிலுள்ளது.

# பொது அறிவு

1. பசுபிக் பிராந்தியத்தில் சுனாமி முன்னெச்சரிக்கை நிலையம் (P.T.W.C.) அமைந்துள்ள இடம் எது?
   ஹவாய்தீவு.
2. பெண்களுக்கான மரதன் போட்டியை நடத்திய நாடு
   அமெரிக்கா
3. உலகப் புகழ் பெற்ற மரதன் போட்டி
   பாஸ்டன் மரதன் போட்டி
4. உலகின் முதல் சைக்கிள் பந்தயம் நடந்த நகர்
   பாரிஸ் (1868 இல் 1.24 மைல் தூரம்
5. முதன் முதலில் விண் வெளிக்குச் சென்ற பெண் வீராங்கனை யார்?
   வாலண்டினா தெரஸ்கோபா
6. தென்னமெரிக்காவிலுள்ள மிக நீளமான ஆறு எது?
   அமேசன் நதி.
7. 'புனித புத்த நகரம்' என்று கண்டி நகரை உலக கலாசார மற்றும் இயற்கை அழகுச் சின்னங்கள் அமைப்பு அறிவித்தது.
8. தமிழகத்தின் மிக நீளமான ஆறு
   காவிரி (760 கிலோ மீற்றர்)
9. உலகின் தேன் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது?
   கியூபா
10. டெஸ்ட் போட்டிகளில் 150 இற்கும் மேற்பட்ட கேட்சுகளைக் கைப்பற்றிய முதல் இரு வீரர்கள்
    மார்க் டெய்லர், ஆலன் பார்டர்
11. இலங்கையின் மிகச் சிறிய நிலப்பரப்புடைய மாவட்டம் எது?
    கொழும்பு
12. மக்கள் தொகை வளர்ச்சி அதிகமுள்ள மதம்
    இஸ்லாம்
13. ஆண்டு தோறும் அயல்நாடுகளுக்குச் சுற்றுலா செல்லும் மக்கள் அதிகமுள்ள நாடு
    அமெரிக்கா
14. உலகச் சுற்றுலாப் பயணிகளுள் அதிகம் பேர் பார்த்து வரும் முதல் நாடு
    பிரான்ஸ்
15. நான்கு முறை சிறந்த டைரக்டராக ஆஸ்கார் விருது பெற்ற அமெரிக்க இயக்குநர்
    ஜான்போர்டு
16. உலக மக்களுள் 46% பேர் 'ஓ' வகை இரத்தப் பிரிவினர்

## முள் முருங்கையின் மருத்துவக்குணம்

முள் முருங்கை முட்களுடன் கூடியவையாக இருப்பினும் அதில் மருத்துவக்குணங்கள் நிறையவே காணப்படுகின்றன. அதில் ஒன்று சிறு குழந்தைகளின் வயிற்றில் புழுக்கள் உண்டாகி வயிற்று நோவால் அவதிப்படும் போது இதன் தளிர்களை வறுத்து சாப்பிடக் கொடுத்தால் அப்புழுக்களின் தொல்லை குறையும் . இந்தமுறை சிறுவர்களுக்கு மட்டுமன்றி வயதானவர்களுக்கும் பொருந்தும்.

இதனை தனியாகவும் வல்லாரை, பொன்னாங்காணி போன்ற கீரைவகைகளுடன் கலந்தும் வறை செய்து சாப்பிடலாம்.

இது வயிற்றுப்புழுக்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமன்றி மூட்டுவலி, வீக்கம் ஏற்படும் போது இந்த இலைகளை சிறிது சூடாக்கி இரவில் வலியுள்ள இடத்தில் வைத்து கட்டினால் வீக்கம் வலி என்பன குணமாகும்.

இம்மரத்தின் பட்டையிலும் இலைகளிலும் ஒருவித இரசாயனப் பதார்த்தம் காணப்படுவதால் அவையே வயிற்றுப்புழுக்களை அழிக்கும் தன்மை கொண்டிருக்கின்றது.

எவ்வாறேனும் வயிற்றோட்டம் உள்ளவர்களுக்கு இது நன்மையளிக்காது. இதன் முற்றிய விதைகள் கிருமிநாசினியாக பயன்படுத்தலாம் அவற்றை குழந்தைகள் கையாள்வதை தவிர்ப்பது நன்று.

# உயரமான கலங்கரைவிளக்கம்!



உலகிலேயே மிக உயரமான கலங்கரைவிளக்கம் ஹொலந்து நாட்டில் ஹெல்டருக்கு அருகில் உள்ள கிஜக்டியின் கலங்கரை விளக்கமாகும் இதன் உயரம் 197 அடி.

இந்தியாவில் மிகப் பழமையான கலங்கரை விளக்கம் வேதாரண்யத்திற்கு அருகில் உள்ள கோடியக்கரை ஆகும். இது 1890 இல் கட்டப்பட்டது. ஆரம்ப காலத்தில் இதற்கு வெளிச்சமூட்ட மண்ணெண்ணை விளக்கும் பின்னர் அசடைலின் என்ற வாயுதான் பயன் படுத்தப்பட்டது இப்போதும் இவ்வாயுவைத்தான் பயன்படுத்துகின்றனர் இவ்விளக்கம் 14000 மெழுகுவர்த்திகளின் ஒளிக்குச் சமமானது 24 கிலோ மீற்றர் வரை தெரியக் கூடியது மகாபலிபுரத்தில் விளக்குக்கு மண்ணெண்ணெய் பயன்படுத்துகின்றனர் இதன் ஒளி 38 கி.மீ வரை தெரியும் சென்னை, பாண்டிச்சேரியில் உள்ள கலங்கரை விளக்கங்கள் மின்சாரத்தால் இயங்குகின்றன.

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் - கார்த்திகை 2005

## கிளிநொச்சி மாவட்டம்

வ/கி/4 திரு.சின்னத்தம்பி கணேசமூர்த்தி
வ/கி/6 திரு.சதாசிவம் பொன்னுத்துரை
வ/கி/10 திரு.ஆறுமுகம் சிவகுரு
வ/கி/15 திருமதி.மகேஸ்வரி சிவஞானசுந்தரம்
வ/கி/17 திரு. சின்னத்தம்பி புஸ்பநாதன்
வ/கி/18 திரு. தர்மலிங்கம் தங்கேஸ்வரன்
வ/கி/21 திருமதி. கீதாஞ்சலி கிருஸ்ணராஜா
வ/கி/23 திரு. சின்னத்தம்பி கனகரத்தினம்
வ/கி/27 திரு. செல்லப்பா பரமசாமி
வ/கி/29 திருமதி. நாகலட்சுமி நவரட்ணம்
வ/கி/30 திருமதி. ஜெயலட்சுமி நடராசா
வ/கி/31 திரு. ஆறுமுகம் பரமேஸ்வரன்
வ/கி/32 திருமதி.சிவபாக்கியம் அருணகிரிநாதன்
வ/கி/33 திருமதி. சறோசா தெட்சணாமூர்த்தி
வ/கி/37 திரு. சதாசிவம் சிவபாலச்சந்திரன்
வ/கி/42 திருமதி.மங்கையற்கரசி திருநாவுக்கரசு
வ/கி/46 திருமதி. கமலாசனி நடராசா
வ/கி/47 திரு. பொன்னுத்துரை பத்மநாதன்
வ/கி/48 திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
வ/கி/50 திருமதி. தனலட்சுமி செல்வநாயகம்
வ/கி/56 திருமதி. புஸ்பமலர் தேவராசா
வ/கி/60 திருமதி. இலட்சுமி கிர்ஷ்ணபிள்ளை
வ/கி/61 திரு. யாகோப் ஜெயராசா
வ/கி/64 திரு. சுப்பிரமணியம் தர்மசீலன்
வ/கி/66 திரு. கணபதிப்பிள்ளை சுப்பையா
வ/கி/69 திருமதி. திரிதாசபகவதி பரமலிங்கம்
வ/கி/71 திரு. சிதம்பரப்பிள்ளை மயில்வாகனம்
வ/கி/75 திரு. இராசையா யோகநாதன்
வ/கி/82 திரு. சுப்பையா சுந்தரலிங்கம்
வ/கி/85 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
வ/கி/88 திரு. சின்னத்தம்பி இளையதம்பி
வ/கி/98 திரு. மதியாபரணம் சுதேசகுமாரன்
வ/கி/103 திரு. சுப்பிரமணியம் சபாரத்தினம்
வ/கி/105 திரு.சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன்
வ/கி/107 திரு. பொன்னையா யோகலிங்கம்
வ/கி/112 திரு. நாகநாதி பத்மநாதன்
வ/கி/113 திரு. சதாசிவம் சிவதாசன்
வ/கி/114 திருமதி. புஸ்பராணி தவராசா
வ/கி/910 திரு. குமாரசாமி சிவஞானமூர்த்தி
வ/கி/2252 திரு. சோமசுந்தரம் நாகேந்திராசா
வ/கி/2594 திரு.பேரின்பநாயகம் மரியதயாளநாயகம்
வ/கி/2848 திருமதி. மேரிகிறேஸ் முடியப்பு
வ/கி/2877 திரு. ஆறுமுகம் விசுவநாதன்
வ/கி/2885 திரு. நாகலிங்கம் தம்பிஐயா
வ/கி/3067 திரு. அந்தோனிப்பிள்ளை திருநாயகம்
வ/கி/3383 திருமதி. கனகம்மா முத்தையா
வ/கி/3427 திரு. நல்லலிங்கம் சண்முகலிங்கம்
வ/கி/3429 திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்
வ/கி/3430 திருமதி. தயாமலா நாகேஸ்வரா
வ/கி/3432 திரு. வேலாயுதம் இராமலிங்கம்
வ/கி/3434 திரு. கணபதிப்பிள்ளை ஜெயரத்தினம்
வ/கி/3437 திரு. ஆறுமுகம் பெரியசாமி
வ/கி/3440 திரு. முத்துசாமி இராசலிங்கம்
வ/கி/3443 திரு. நாகமணி கந்தசாமி
வ/கி/3448 திரு. இராமசாமி பன்னீர்ச்செல்வம்
வ/கி/3449 திருமதி. சிவபாக்கியம் சிவராசா
வ/கி/3450 திரு. தம்பையா இராசேஸ்வரன்
வ/கி/3452 திரு. இரத்தினம் ஸ்ரீதரன்
வ/கி/3457 திரு. தில்லையம்பலம் திருஞானசம்பந்தன்
வ/கி/3458 திரு. முத்தையா சிவனேசன்
வ/கி/3460 திருமதி.அன்னபூரணம் பாலசுப்பிரமணியம்
வ/கி/3462 திரு. சுப்பிரமணியம் சிவஞானமூர்த்தி
வ/கி/3463 திரு. இராசையா கதிர்காமநாதன்
வ/கி/3466 திரு. காசித்தம்பி துரைராசசிங்கம்
வ/கி/3523 திருமதி. யோகரஞ்சிதம் விநோதன்
வ/கி/3524 திரு. கனகரத்தினம் சண்முகராசா
வ/கி/3548 திரு. செல்லத்துரை கணேசன்
வ/கி/3549 திருமதி. சறோ உதயன்

## முல்லைத்தீவு மாவட்டம்

மு/9 திரு. சுவானிப்பிள்ளை ஆரோக்கியநாதர்
மு/11 திரு. சுப்பிரமணியம் சேதுகாவலன்
மு/15 திரு. மரியதாஸ் நல்லையா அன்ரன்குலதாஸ்
மு/21 திரு. தைரியநாதன் நவரெட்ணம்
மு/36 திரு. சுப்பிரமணியம் அருந்தவச்செல்வம்
மு/38 திரு. தேக்கன் முருகேசு
மு/49 திரு. சதாசிவம் சிவவரதராசன்
மு/149 திருமதி. வள்ளிப்பிள்ளை விநாயகமூர்த்தி
மு/169 திரு. விநாசித்தம்பி கமலநாதன்
மு/170 திரு. கு.கந்தையா சதாசிவம்
மு/175 திரு. கனகரட்ணம் மனோகரன்
மு/177 திரு. நாகலிங்கம் சின்னத்தம்பி
மு/178 திரு. வல்லிபுரம் குணபாலசிங்கம்
மு/180 திரு. செல்லன் நவரத்தினம்
மு/183 திருமதி. சிவபாக்கியம் சிவப்பிரகாசம்
மு/186 திருமதி. சீதாராணி தர்மரட்ணம்
மு/191 திரு. இராசையா சிவபாலசேகரம்பிள்ளை
மு/192 திரு. இராமசாமி கந்தையா
மு/196 திரு. செல்லப்பா அரிராசசிங்கம்
மு/199 திரு. செல்லர் இரத்தினம்
மு/200 திரு. சின்னத்துரை சிவலிங்கம்
மு/202 திரு. பொன்னையா விக்கினேஸ்வரன்
மு/207 திரு. சின்னத்துரை வேதவனம்
மு/209 திருமதி. தேவிநாயகம் கந்தசாமி
மு/211 திரு. கறுப்பன் லெட்சுமணன்
மு/212 திருமதி. இராசம்மா கணபதிப்பிள்ளை
மு/214 திரு. அருளப்பு ஞானேந்திரன்
மு/216 திரு. நல்லதம்பி கனகசுந்தரம்
மு/218 திரு. கந்தையா முத்துக்குமாரு
மு/220 திரு. கணபதிப்பிள்ளை முருகையா
மு/221 திரு. கதிரவேலு ஜெயக்கொடி
மு/222 திரு. வேலு நாகலிங்கம்
மு/224 திரு. நாகரத்தினம் நடராசா
மு/225 திரு. விநாசித்தம்பி குகராசா
மு/226 திரு. ஐயாத்துரை அம்பலவாணர்
மு/229 திரு. பரராசசிங்கம் பத்மநாதன்
மு/230 திரு. முருகேசு சிவபாதசுந்தரம்
மு/234 திரு. வேலுப்பிள்ளை அழகராசா
மு/236 திரு. சிதம்பரப்பிள்ளை தவராசா
மு/238 திரு. சின்னையா மகாலிங்கம்
மு/240 திரு. ஐயாத்துரை கந்தசாமி
மு/241 திருமதி. தெய்வச்சிலை முத்துக்குமாரசாமி
மு/243 திரு. தம்பையா தில்லையம்பலம்
மு/245 திரு. செல்லத்துரை நடராசா
மு/246 திரு. சிதம்பரப்பிள்ளை இரத்தினசிங்கம்
மு/249 திரு. சுப்பிரமணியம் தியாகராஜா
மு/250 திருமதி.இரத்தினாவதி அம்மாள் பொன்னையா
மு/251 திரு. வல்லிபுரம் பஞ்சலிங்கம்
மு/254 திரு. ஆறுமுகம் கணேசன்
மு/258 திரு. சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை
மு/259 திரு. கந்தையா பரமலிங்கம்
மு/261 திரு. நாகலிங்கம் ஆனந்தராசா
மு/262 திரு. குமாரசாமி நல்லைநாதன்
மு/263 திரு. பொன்னையா மங்களஜெகநாதன்
மு/265 திரு. சதாசிவம் கணபதிப்பிள்ளை
மு/266 திரு. மயில்வாகனம் நாகரத்தினம்
மு/267 திரு. முருகுப்பிள்ளை இராசலிங்கம்
மு/269 திரு. பேரம்பலம் கந்தசாமி
மு/270 திரு. தம்பையா இராசரத்தினம்
மு/271 திரு. பரமு பத்மநாதன்
மு/272 திரு. கணபதி நாகேஸ்வரன்
மு/274 திரு. விநாசித்தம்பி நடராசா
மு/276 திரு. வன்னியசிங்கம் குலதேவன்
மு/278 திரு. வேதாரணியம் நாகராசா
மு/279 திரு. சதாசிவம் நடராசா
மு/280 திரு. பாலசிங்கம் செல்வராசா
மு/281 திரு. காசிப்பிள்ளை இரத்தினசிங்கம்
மு/288 திரு. நடராசா குணரத்தினம்
மு/289 திரு. செல்லையா சிவலிங்கம்
மு/291 திரு. இராசசேகரி செல்லத்தம்பி
மு/296 திரு. சின்னையா தருமராசா
மு/298 திரு. சுப்பையா செல்வராசா
மு/301 திரு. சின்னையா மயில்வாகனம்
மு/307 திரு. கதிரிப்பிள்ளை இராசரத்தினம்
மு/312 திரு. சிவப்பிரகாசம் மகேஸ்வரன்
மு/313 திரு. ஜோர்ஜ் கிறிஸ்ரி
மு/314 திரு. செபஸ்ரியாம்பிள்ளை ஸ்ரீநேசராசா
மு/316 திரு. தர்மலிங்கம் காசிநாதன்
மு/324 திரு. பரமநாதன் நவரத்தினம்
மு/326 திரு. சங்கரப்பிள்ளை விக்கினேஸ்வரன்
மு/327 திரு. சிவசிதம்பரம் ரவீந்திரன்
மு/328 திரு. ஆறுமுகம் சௌந்தரராசா
மு/329 திரு. தம்பிப்பிள்ளை சிவகோசரியார்
மு/330 திரு. இராமசாமி மாடசாமி
மு/331 திரு. இராமசாமி கணபதிப்பிள்ளை
மு/336 திரு. சின்னத்துரை கந்தசாமி
மு/337 திருமதி. பவாநிதி செல்வராசா
மு/338 திரு. தம்பு தவராசா
மு/339 திரு. சரவணமுத்து ரவீந்திரன்
மு/340 திரு. வாசவன் கானதாசன்
மு/343 திரு. மனுவேற்பிள்ளை அல்பிறட்
மு/345 திரு. கணபதிப்பிள்ளை இராசன்
மு/348 திரு. கதிரவேலு செல்லையா
மு/349 திரு. சுப்பையா நாகலிங்கம்
மு/350 திரு. செல்லப்பா மகாலிங்கம்
மு/358 திரு. குருநாதபிள்ளை சதாசிவம்
மு/361 திரு. சந்திரசேகரம்பிள்ளை வடிவேல்பிள்ளை
மு/363 திரு. வயித்திலிங்கம் சிவஞானலிங்கம்
மு/371 திரு. முதலித்தம்பி பாலசுப்பிரமணியம்
மு/390 திரு. நமசிவாயம் விஜயரத்தினம்
மு/403 திரு. காசிநாதபிள்ளை பாஸ்கரன்
மு/404 திரு. வேலுப்பிள்ளை விஜயராசா
மு/513 திரு. மரியநாயகம் தொம்மைப்பிள்ளை
மு/517 திரு. சரவணமுத்து நாகரத்தினம்
மு/541 திருமதி. மரியம்மா அந்தோணிப்பிள்ளை
மு/552 திரு. மாணிக்கம் தர்மராசா
மு/558 திரு. சதாசிவம் தெட்சணாமூர்த்தி
மு/559 திரு. சுப்பிரமணியம் சிறிஸ்காந்தராசா
மு/565 திரு. வீரசிங்கம் குலேந்திரம்
மு/568 திரு. கணபதிப்பிள்ளை குணரத்தினம்
மு/570 திரு. செல்லரட்ணம் சிவகுமாரன்
மு/581 திரு. சதாசிவம் கனகராசா
மு/584 திரு. [illegible]மணி ஆனந்தராசா
மு/587 திரு. [illegible] இராசரெத்தினம்
மு/597 திரு. மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை
மு/598 திரு. செல்லையா சபாரெத்தினம்
மு/616 திருமதி. சிவனேஸ்வரி சுரேஸ்
மு/617 திரு. கந்தசாமி விஜயரத்தினம்
மு/622 திரு. கா.அந்தோனிமுத்து அற்புதராசா
மு/633 திரு. பொன்னையா தங்கவேலு
மு/653 திரு. றிச்சாட் றோமியன்
மு/660 திரு. செல்லையா சிவனொளிபாதம்
மு/666 திரு. கனகசபை சிறிஸ்கந்தராசா
மு/684 திரு.செபஸ்தியாம்பிள்ளை அன்ரனிகுலசிங்கம்
மு/693 திரு. முத்துக்குமாரு நடராசா
மு/716 திருமதி. ஜெனதா குணசேகரம்
மு/766 திரு. வைரையா வைரவமூர்த்தி
மு/774 திருமதி. தெய்வானை சின்னத்துரை
மு/783 திரு. நடராசா ஆறுமுகநாதன்
மு/793 திருமதி. அகஸ்ராபூடி சூசைதாஸ்
மு/798 திரு. சதாசிவம் சுப்பிரமணியம்
மு/799 திரு. சரவணை சுந்தரலிங்கம்
மு/800 திரு. சந்தணம் ராமச்சந்திரன்
மு/801 திரு. வேலுப்பிள்ளை சாம்பசிவம்
மு/803 திரு. கந்தையா கதிர்காமத்தம்பி
மு/806 திரு. பொன்னம்பலம் சிவசேகர்
மு/808 திரு. மருதையினார் சண்முகராசா
மு/814 திரு. செபஸ்தியான் மனோகரன்
மு/816 திரு. சுப்பிரமணியம் தேவசேனாபதி
மு/817 திரு. சின்னையா கணேசலிங்கம்
மு/820 திரு. சிவராசா யோகரத்தினம்
மு/821 திரு. மகாலிங்கம் பரமநாயகம்
மு/823 திரு. சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்
மு/825 திரு. சங்கரலிங்கம் ரவிதாஸ்
மு/826 திரு. வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்
மு/827 திரு. இராசையா நடராசா
மு/835 திரு. கந்தசாமி இராமநாதன்
மு/839 திருமதி. நேசமலர் ஜெயபாலசிங்கம்
மு/840 திருமதி. செல்வமலர் செல்வரத்தினம்
மு/844 திரு. சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்
மு/846 திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
மு/847 திருமதி. வில்வரட்ணம் பூமணி
மு/848 திரு. சாமிநாதன் மாணிக்கம்
மு/850 திரு. சதாசிவம் தியாகராசா
மு/852 திரு. சின்னையா பிரம்மசிறி
மு/854 திரு. கதிரமலை குணசேகரம்
மு/857 திரு.செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி
மு/858 திரு. தர்மலிங்கம் பாலசுந்தரம்
மு/861 திருமதி. மனோன்மணி மார்க்கண்டு
மு/880 திரு. தம்பையா நிதராமவீரலிங்கம்
மு/885 திரு. சில்வாவிமல் விமல்
மு/889 திரு. மயில்வாகனம் சச்சிதானந்தம்
மு/901 திரு. வைரமுத்து தெய்வேந்திரராசா
மு/921 திரு. காசிப்பிள்ளை இராசலிங்கம்
மு/946 திரு. செல்லையா தவேந்திரராசா
மு/947 திரு. சபாரத்தினம் சந்திரகுமார்
மு/949 திரு. முத்தையா குருகுலராசா
மு/950 திரு. நடராஜா தர்மலிங்கம்
மு/955 திருமதி. அமுதராணி வேலாயுதம்
மு/957 திரு. ஐயன் கந்தசாமி
மு/958 திரு. முத்தையா சோமசுந்தரம்
மு/959 திரு. பாச்சோ லசிங்டன்
மு/961 திரு. சிவராசா நாகரத்தினம்
மு/962 திரு. கதிர்காமத்தம்பி ஜெயபாலினா
மு/964 திரு. வேலுப்பிள்ளை தங்கராசா
மு/966 திருமதி. பரமேஸ்வரி பரமநாதன்
மு/968 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
மு/969 திருமதி. புஸ்பராணி பாலேந்திரன்
மு/975 திரு. குமாரையா முருகுப்பிள்ளை
மு/981 திரு. தம்பையா நேசலிங்கம்
மு/983 திரு. கந்தையா சிவராசா
மு/984 திரு. சரவணை தர்மகுலசிங்கம்
மு/988 திருமதி. தேவி மயில்வாகனம்
மு/991 திருமதி. தெய்வநாயகி இராசரத்தினம்
மு/993 திருமதி. சரஸ்வதி மகாலிங்கம்
மு/994 திரு. கந்தையா பேரம்பலம்
மு/999 திரு. முருகேசு வேலுச்சாமி
மு/1001 திரு. செல்லத்துரை சண்முகநாதன்
மு/1003 திரு. பச்சைமுத்து கனகரத்தினம்
மு/1006 திரு. தளையசிங்கம் செந்தில்நாதன்
மு/1009 திரு. வேதாரணியம் செல்லத்தம்பி
மு/1029 திருமதி. செல்வராணி யேசுதாசன்
மு/1031 திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
மு/1059 திருமதி. நவமணிதேவி கார்த்திகேசு
மு/1071 திருமதி. யோகாம்பிகை இராசையா
மு/1072 திருமதி. கமலா விக்கினேஸ்வரன்
மு/1074 திரு.பிச்சைக்காரன் கருப்பையா (ஆனந்தன்)
மு/1077 திருமதி. அருந்தவராணி மகாலிங்கம்
மு/1085 திரு. சவரிமுத்து மிக்கேல்பிள்ளை
மு/1088 திரு. அந்தோனிமுத்து அருள்ராஜா
மு/1089 திரு. சவரிமுத்து இராசபோபாலசாமி
மு/1091 திரு. முருகேசு சிவநேசன்
மு/1092 திரு. யோசேப் மாசிலாமணி
மு/1105 திரு. முத்தையா தியாகராசா
மு/1106 திரு. அப்புத்துரை செல்வரத்தினம்
மு/1119 திரு. செல்லையா இரத்தினசிங்கம்
மு/1122 திரு.சவரிமுத்து பிரான்சிஸ் அலோசியஸ்
மு/1134 திரு. முடியப்பு கிறேசியன் வில்வராஜா
மு/1144 திருமதி. அருள்நாயகி அன்ரனிகில்பேட்
மு/1149 திருமதி. யோகராணி யேசுதாஸ்
மு/1152 திரு. பெருமாள் வேணுகோபால்
மு/1160 திரு. நாகராசா கிருஸ்ணானந்தன்
மு/1161 திரு. சிவலிங்கம் மகேந்திரம்
மு/1164 திரு. சிங்கராசா பாக்கியநாதன்
மு/1168 திரு.செபமாலை செபஸ்தியாம்பிள்ளை
மு/1174 திருமதி. தங்கரத்தினம் மதியாபரணம்
மு/1233 திரு. சுப்பிரமணியம் துரைராசா
மு/1289 திரு. இராசையா முருகதாஸ்
மு/1290 திரு. பொன்னையா லோகநாதன்
மு/1292 திரு. சுப்பிரமணியம் காந்தராசா
மு/1296 திருமதி. ஸ்ரீபதி நவரத்தினலிங்கம்
மு/1297 திருமதி. கமலாதேவி விஜியானந்தன்
மு/1298 திரு. பொன்னுத்துரை கதிர்காமநாதன்
மு/1300 திரு. இராசமாணிக்கம் சுப்பிரமணியம்
மு/1301 திருமதி. அன்னலச்சிமி கதிரவேலு
மு/1303 திருமதி. சத்தியதேவி பாலசிங்கம்
மு/1304 திரு. வேலுப்பிள்ளை சிவலிங்கம்
மு/1305 திரு. முத்துக்குமாரு சந்திரசேகரம்
மு/1306 திரு. வேலு மகேஸ்வரன்
மு/1307 திரு. செல்லத்துரை பரமேஸ்வரன்
மு/1309 திரு. ஆறுமுகம் சோமசுந்தரம்
மு/1310 திரு. கந்தையா ஜெயக்கொடி
மு/1312 திரு. கிருஷ்ணபிள்ளை தேவராசா
மு/1313 திரு. சின்னையா வேலாயுதபிள்ளை
மு/1314 திருமதி. சரோஜினிதேவி இராசரட்ணம்
மு/1315 திரு. பாலரத்தினம் செல்வரத்தினம்
மு/1316 திரு. சங்கரப்பிள்ளை சிவராசா
மு/1319 திரு. இராசரத்தினம் தெய்வேந்திரம்
மு/1324 திருமதி. ஜெயக்குமாரி மகேந்திரராசா
மு/1325 திரு. நற்குணம் யோகரட்ணம்
மு/1327 திரு. திருநாவுக்கரசு செல்வராசா
மு/1330 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
மு/1332 திரு. சிவசுந்தரம் கணேசபிள்ளை
மு/1333 திரு. சண்முகம் நேசரட்ணம்
மு/1338 திரு. இராமலிங்கம் நாகரத்தினம்
மு/1340 திரு.கணபதிப்பிள்ளை ஜெயபாலசிங்கம்
மு/1341 திரு. முருகேசபிள்ளை இலங்கேஸ்வரன்
மு/1345 திரு. சீவரட்ணம் சந்திரசேகரம்பிள்ளை
மு/1348 திரு. இராசசேகரி வீரசிங்கம்
மு/1349 திரு. பொன்னையா இராசரத்தினம்
மு/1353 திரு. தம்பு தருமகுலசிங்கம்
மு/1354 திரு. சீனியர் வேலாயுதம்
மு/1355 திரு. அப்பையா பரஞ்சோதி
மு/1356 திரு. கதிர்காமர் நவரத்தினராசா
மு/1357 திரு. சிவசம்பு நாகரத்தினம்
மு/1358 திருமதி. பரமேஸ்வரி செல்வசுந்தரம்
மு/1359 திரு. ஆறுமுகம் திருநாவுக்கரசு
மு/1363 திரு. சின்னத்தம்பி மகேந்திரன்
மு/1364 திரு. சின்னத்தம்பி அழகன்
மு/1368 திரு. வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
மு/1369 திரு. கந்தையா சுந்தரலிங்கம்
மு/1370 திரு. சுப்பிரமணியம் தெய்வேந்திரன்
மு/1403 திருமதி. இராக்கினியம்மா அல்பிறற்
மு/1407 திரு.சின்னத்தம்பி அன்ரன்ஜெயபாலன்
மு/1413 திரு. செபஸ்தியாம்பிள்ளை செலஸ்ரீன் பிறேமராஜா
மு/1426 திருமதி. அக்கினேஸ் செபமாலை
மு/1436 திரு.சூசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை
மு/1438 செல்வி. மரியப்பிள்ளை ஜேமிஸ்
மு/1455 திரு. செல்வராசா கோபாலகிருஸ்ணன்
மு/1483 திரு. சின்னப்பு சிவபாதம்
மு/1486 திரு. சின்னத்தம்பி செல்வரத்தினம்
மு/1487 திரு. காசி சிவஞானம்
மு/1489 திரு. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்
மு/1490 திரு. திருநாவுக்கரசு மகாலிங்கம்
மு/1492 திரு. இராசையா தர்மலிங்கம்
மு/1494 திரு. சின்னையா துரைராசா
மு/1495 திரு. சிவசிதம்பரம் கோங்காதரம்
மு/1496 திரு. நல்லதம்பி பொன்னையா
மு/1497 திரு. சங்கரப்பிள்ளை விநாயகமூர்த்தி
மு/1498 திரு. சிவகுரு சிறிதரன்
மு/1499 திருமதி. சிவராமமலர்மங்கை சிதம்பரப்பிள்ளை
மு/1501 திரு. கந்தையா சிறீஸ்கந்தராசா
மு/1502 திரு. ஆறுமுகம் அருந்தவகுமார்
மு/1504 திரு. கந்தையா மார்க்கண்டு
மு/1505 திரு. சோமசுந்தரமூர்த்தி சுதந்திரன்
மு/1506 திரு. இராமன் கணபதிப்பிள்ளை
மு/1508 திரு. தங்கவேல் கணேசன்
மு/1510 திரு. வாரி கந்தசாமி
மு/1511 திரு. ஆறுமுகம் தருமராசா
மு/1512 திரு. நவரத்தினம் சிவலிங்கம்
மு/1513 திரு. வீரபாகு சந்திரதாசன்
மு/1514 திரு. நல்லையா ஸ்ரீவிக்கினேஸ்வரன்
மு/1515 திரு. சண்முகநாதன் வேலழகன்
மு/1516 திரு. சந்தனம் யோகநாதன்
மு/1517 திரு. சண்முகம் கனகரட்ணம்
மு/1518 திரு. சுப்பையா சண்முகவேல்
மு/1521 திரு. கோவிந்தசாமி ராசேந்திரம்
மு/1535 திரு. பர்ணாந்து சின்னப்பு
மு/1536 திருமதி. கோமளநாயகி கைலைநாதன்
மு/1543 திரு. வேலுப்பிள்ளை தவராசா
மு/1545 திரு. செல்லையா புவனேஸ்வரன்
மு/1547 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி
மு/1551 திரு. கிட்டிணபிள்ளை மணிவாசகன்
மு/1552 திரு. குமாரசாமி லோகேந்திரன்
மு/1553 திரு. சந்தியாகு அருள்ஞானசீலன்

(தொடரும்...)

# சோமவன்ச, விமல் வீரவன்சவை காட்டமாக சாடுகிறார் ரோகணவிஜேவீரவின் மைத்துனர்

(கொழும்பு)

ஜே.வி.பியின் தற்போதைய தலைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்கள் பொருளைக் கொடுத்து ஏனைய அரசியல் தலைவர்களை விமர்சிப்பதாக ஜே.வி. பி. யின் வன்முறைகள் அற்ற விடுதலை அமைப்பின் தலைவரும், ரோகண விஜேவீரவின் மைத்துனருமான பேராசிரியர் சுபாஸ் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் ரோகணவை எனது 17 அகவைக்கு முதல் சந்தித்தேன். 1965 ஆம் ஆண்டு முதல் தீவிரமாக ஆலோசித்து 1968 ஆம் ஆண்டில் நாம் இருவரும் சேர்ந்து ஜே.வி.பியை உருவாக்கினோம். நான் ஒன்பது வருடங்கள் சிறைவாசம் அனுபவித்ததுடன், அங்குபல கொடுமையான துன்புறுத்தல்களிற்கும் ஆளானேன்.

தேசிய பிரச்சினையே இன்று நாட்டின் முக்கிய பிரச்சினை ஆகும். இதை பணக்கார சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களே ஏற்படுத்தினர். சனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரா பண்டாரநாயக்க ஆகியோரும் தாராளவாத தனவந்த வணிக பிற்போக்குவாத பிரதிநிதிகளாகவே உள்ளனர்.

இன்று சோமவன்ச நாட்டில் இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என்று கூறுகின்றார். மறுபுறம் விஜேவீரவின் கருத்துகளுக்கு பொய்யான கருத்துக்களைக் கொடுத்து விமல் வீரவன்ச ஏனைய தலைவர்களை விமர்சனம் செய்கின்றார்.

இந்த நாட்டில் முக்கியமாகத் தீர்க்கப்பட வேண்டிய தேசிய இனப் பிரச்சினை இருக்கின்றது. எம்மைப் போன்றே தமிழ்மக்களும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று நிம்மதியாக வாழ வேண்டும் என்றும் அவர் அங்கு தெரிவித்திருந்தார்.

# அனுதாபத்தைப்பெற மகிந்த குழுவினர் குண்டு வெடிப்புகளை நடத்தக்கூடும்

## -மக்களை எச்சரிக்கிறது ஐ.தே.கட்சி

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் அனுதாபத்தைப் பெறுவதற்காக சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக்கூட்டங்களில் எதிர்வரும் நாட்களில் துப்பாக்கிச்சூடோ, குண்டுவெடிப்போ நடத்தக்கூடும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அச்சம் தெரிவித்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அக்கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறும்போது;

அனுதாபத்தைப்பெறுவதற்காக குண்டுவெடிப்புக்கள் மற்றும் துப்பாக்கிச்சூடுகளை மகிந்தவின் தரப்பினர் மேற்கொள்ளக்கூடும் என்பதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

மகிந்தவின் கூட்டத்தில் சிறிய அளவிலான குண்டுவெடிப்போ, குண்டு துளைக்காத உடை அணிந்த நிலையில் மகிந்த மீது போலியாக துப்பாக்கிச்சூடோ நடத்தக்கூடும் என்ற தகவல் நம்பிக்கையான இடத்திலிருந்து எமக்குக்கிடைத்துள்ளது.

இது போன்ற மலிவான உத்திகளை மக்கள் அவதானித்து வாக்களிக்க வேண்டும். வரவு-செலவுத்திட்ட அறிக்கையும் தோல்வியடைந்து விட்ட நிலையில் இது போன்ற அனுதாப வாக்குகளைப்பெற அவர்கள் முயற்சிக்கிறார்கள். எதிர்வரும் நாட்களில் தேர்தலைச் சீர்குலைக்கும் வன்முறைகள் இடம்பெறக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.


# பதவி வெற்றிடங்கள்

## பரந்தன் - பூநகரி வீதிப் புனரமைப்பு ADB PROJECT - CAARP

வதிவிடப்பொறியியலாளர் (ஆலோசகர்பிரிவு) அலுவலகத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றார்கள்.

| பதவி நிலை | தகைமை |
|---|---|
| 1. நில அளவை உதவியாளர் | க.பொ.த.(உ/த) அல்லது க.பொ.த. (சா/த) உடன் துறைசார் அனுபவமும் தேவை. |
| 2. ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.(உ/த) உடன் துறைசார் அனுபவம் முக்கியம் தேவை. |
| 3. காரியதரிசி | க.பொ.த.(உ/த) உடன் ஆங்கில அறிவும், கொம்பியூட்டர் அனுபவமும் தேவை. |
| 4. நிர்வாக லிகிதர் | க.பொ.த.(உ/த) உடன் கொம்பியூட்டர் அனுபவமும் தேவை. |
| 5. காரியாலய உதவியாளர் | க.பொ.த.(சா/த) சித்தி. |
| 6. படவரைஞர் | படவரைஞர் தரம் சித்தியடைந்தும் ஓட்டோகட் பட வரைதலில் அனுபவம் முக்கியம் தேவை. |

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு 14.11.2005 அன்றும் 21.11.2005 அன்றும் காலை 9.மணிமுதல் 12 மணி வரையும் வதிவிடப்பொறியியலாளர் அலுவலகம் தொண்டமான் நகர், கண்டி-யாழ் வீதி (249K.M அருகாமை) கிளிநொச்சி எனும் முகவரியில் நடைபெற இருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு ஏதாவதொரு நாளில் தேவையான சான்றிதழ்களுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வதிவிடப் பொறியியலாளர்,
(ஆலோசகர் பிரிவு),
கிளிநொச்சி.

(6919)


# அரச சொத்து முறையற்றவகையில் பயன்படுத்தப்படுவதாக 10 முறைப்பாடுகள்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்தின் சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பத்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் சில தகவல்களாக மட்டும் இருப்பதாகவும் மேலும் சில முறைப்பாடுகளில் விசாரணை செய்வதற்குப் போதியளவு விடயங்கள் தரப்படவில்லையென்றும் இலஞ்சஊழல் ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

# சமாதான முயற்சியில் ஏற்பட்ட முடக்கமே பதவிவிலகலுக்குக் காரணம்

## -ஜயந்ததனபால கூறுகிறார்

சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளிற்கு மிடையேயான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முடக்கம் மற்றும் தொடரும் கொலைகள் காரணமாகவே தான் பதவி விலகியுள்ளதாக ஜயந்ததனபால கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் பணிப்பாளராகக் கடந்த ஆண்டு யூலை மாதத்திலிருந்து பணியாற்றி வரும் ஜயந்ததனபால தனது பதவியிலிருந்து கடந்த புதன்கிழமை விலகினார்.

தற்போது ஸ்டாக்ஹோம் நகரில் தங்கியுள்ள ஜயந்ததனபால தனது பதவி விலகல் குறித்த கடிதத்தினை சிறிலங்காவின் சனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார். சந்திரிகாவும் அவரது விலகலை ஏற்றுக்கொண்டமை தெரிந்ததே.



கட்டாக்காலி மாடுகள் துணுக்காய்பகுதி நெல் வயல்களில் மேய்வதை படத்தில் காணலாம். இதனால் விவசாயிகள் தமது பயிர் அழிவு குறித்து கவலையடைந்துள்ளனர். (24)

# வர்த்தகர்களைப் பொறுப்புடன் செயற்பட கிளி. அரச அதிபர் கோரிக்கை

கிளிநொச்சி நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் மழை வெள்ளம் புகுவதுடன், நகரில் வெள்ளம் தேங்கி நிற்பதற்கும் வர்த்தகர்களின் பொறுப்பற்ற செயற்பாடே காரணம் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த கால யுத்தச்சூழலின் பின்னர் நகரப்பகுதியில் விற்பனை நிலையங்கள் அதிகரித்துள்ளன. இது எமது மாவட்டத்தின் வளர்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டுகின்றது. இந்த நிலையில் வர்த்தகர்கள் சமூக நலனை கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும் ஏ.9 வீதியின் இருமருங்கிலும் உள்ள வர்த்தகர்கள் தமது வியாபாரநிலையங்களுக்கு



முன்பாக உள்ள கழிவுநீர் வழிந்தோடும் வடிகால்களை மூடி அதனைப் பாதையாக மாற்றியுள்ளனர். இவர்களின் இந்த நிலையால் நகரப்பகுதியில் மழைவெள்ளம் தேங்குகின்றது. இவ்வாறு வழிந்தோட முடியாது தேங்குகின்ற வெள்ள நீர் அதிகரிக்கின்ற பொழுது பிரதான வீதியை குறுக்கறுத்துப் பாய்ந்தோடுகிறது. அதுமட்டுமல்லாமல் சில வர்த்தக நிறுவனங்களுக்குள்ளும் நீர் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையின் உருவாக்கத்தால் பல்வேறு பட்ட சிரமங்களை மக்களும், போக்குவரத்துச்செய்பவர்களும், ஏன் வர்த்தகர்களும் கூட அனுபவிக்கிறார்கள். எனவே ஆபத்தானதும், வீண் சிரமங்களை ஏற்படுத்துவதுமான இந்த நிலையை தவிர்க்கும் முகமாக வர்த்தகர்கள் செயற்படவேண்டும். அதுவே எமது முன்னேற்றத்திற்கு வழிசமைக்கும் என்று கூறிய அவர் வர்த்தகர்கள் சமூக முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டு பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (லோ, தீ)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
# 2006 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்
# (பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பனவற்றிக்கு 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 02.12.2005 ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிவரை வலி.தென்மேற்குப் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும், செயலாளர். வலி,தென் மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு, தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்இடப்படல் வேண்டும் மூன்றாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்," உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் அந்தந்த உப அலுவலகத்தில் 01.12.2005ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தமதுதேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல்வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தங்கள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டால் தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடாத்துவதற்கு காணிச் சொந்தக்காரருடன் செய்து கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி விண்ணப்பங்கள் சபையில் பெற்று உரிய முறைப்படி நிரப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் நேரத்திற்கு முன்னராக சபைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்கைச் செலுத்தி 09.12.2005 ஆம் திகதிக்கு முன்னர் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:-

01. ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக் கடை, கருவாட்டுக்கடைகளை ஒப்பந்தம்செய்யப்படும் தினத்தில் மூன்று மாத வாடகை முற்பணம் அதற்கான பெறுமதி சேர்க்கப்பட்ட (VAT) வரியும் செலுத்தப்படல் வேண்டும்.

02. சந்தை குத்தகை பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியில் 3 வீதம் மேல் சந்தை வரிஅறவிடல் கூடாது.

03. சந்தையில்இருந்து 01 கிலோ மீற்றர் சுற்றாடலில் மீன்,மரக்கறி விற்பதுதடை செய்யப்பட்டுள்ளது.

04. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2 இற்கும், மோட்டார் சைக்கிளிற்கு ரூபா 3 இற்கும்மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக் கூடாது.

05. கேள்விப் பத்திரம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பனவற்றிற்கு பெறுமதி சேர்வரி (VAT) செலுத்தப்படல் வேண்டும்.

06. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவம் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிருபிக்கும் கடிதமும், முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

07. கேள்விப்பத்திரங்களை பின்வரும் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் (மானிப்பாய் பட்டின/கிராமஉபஅலுவலகம்),(பண்டத்தரிப்பு பட்டின/கிராமஉப அலுவலகம்) மேலதிக விபரங்களை தலைமையலுவலகத்திலும்,அந்தந்த உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

## 2006 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், குத்தகைக்கு விடுவதற்கான கணிப்பீடு

| இல | சந்தைகள் (துவிச்சக் கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள்,கருவாட்டுக்கடைகள்) | மீளளிக்கப்படாதகேள்விப் பத்திரக் கட்டணம். | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மாதாந்த கடைவாடகைக் கட்டணம் (வற்வரி தவிர்ந்த) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|
| 01. | மானிப்பாய்பட்டின உபஅலுவலகம் | | | | |
| | 01.மானிப்பாய் பொதுச்சந்தை. | 500.00 | 3000.00 | - | 401,900.00 |
| | 02.மானி.சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 400.00 | 187.000.00 |
| | 03.மானி.சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 300.00 | 35,750.00 |
| | 04.மானி.சந்தை கோழிஇறைச்சிக்கடை. | 500.00 | 1500.00 | - | 14,300.00 |
| 02. | மானிப்பாய் கிராமஉபஅலுவலகம் | | | | |
| | 01.காக்கைதீவு பொதுச்சந்தை | 500.00 | 1500.00 | - | 14,300.00 |
| | 02.நவாலிபிரசாத் சந்தை | 500.00 | 2000.00 | - | 77,100.00 |
| | 03.சாவற்கட்டுச்சந்தை | 500.00 | 2000.00 | - | 90.000.00 |
| | 04.சண்டிலிப்பாய் சந்தை | 500.00 | 1500.00 | - | 46,200.00 |
| | 05நவாலிபிரசாத்சந்தைமாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 400.00 | 66.000.00 |
| | 06நவாலிபிரசாத்சந்தைஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 300.00 | 26,400.00 |
| | 07.ஆனைக்கோட்டைமாட்டிறைச்சிக்கடை. | 500.00 | 3000.00 | - | 176,000.00 |
| | 08.ஆனைக்கோட்டை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | - | 33,070.00 |
| 03. | பண்டத்தரிப்பு பட்டினஉப அலுவலகம். | | | | |
| | 01.பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 500.00 | 3000.00 | - | 250,000.00 |
| | 02.பண்.சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2500.00 | 300.00 | 44,350.00 |
| | 03.பண்.சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 300.00 | 15,000.00 |
| | 04.பண்.சந்தைகருவாட்டுக்கடை இல01 | 500.00 | 1500.00 | 250.00 | 7,500.00 |
| | 05.பண்.சந்தை கருவாட்டுக்கடை இல2 | 500.00 | 1500.00 | 250.00 | 7 500.00 |
| 04. | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | | |
| | 01.மாசியப்பிட்டிச்சந்தை | 500.00 | 2000.00 | - | 86,900.00 |
| | 02.இளவாலைச்சந்தை | 500.00 | 2000.00 | - | 89.400.00 |
| | 03.மாதகல் சந்தை | 500.00 | 2000.00 | - | 27,600.00 |
| | 04.மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 250.00 | 33,000.00 |
| | 05.மாசியப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 250.00 | 5,500.00 |
| | 06.மாதகல்மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 250.00 | 8.800.00 |
| | 07.மாதகல்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 250.00 | 50.750.00 |
| | 08.இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | - | 5.500.00 |
| | 09.பெரியவிளான் சந்தை | 500.00 | 1500.00 | - | 5.500.00 |

வலிகாமம் தென்மேற்குப்பிரதேசசபை,
மானிப்பாய்,
10.11.2005.

மேரியோசேப் சாந்தசீலன்,
செயலாளர்,
வலிகாமம்தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி.13333)

# தமிழீழ விளையாட்டுத்துறை பாராட்டு



2005 ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற ஈட்டி எறிதல்போட்டியில் 21 வயதின் கீழ் பிரிவில் மன்னார் மாவட்டம் கருங்கண்டல் றோ.க.த மகாவித்தியாலய மாணவன் பத்திநாதன் ஆரோக்கியராஜா மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 54.64 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து மூன்றாமிடத்தை பெற்றார்.

இவருக்கு தமிழீழ விளையாட்டுத்துறை தமது பாராட்டுதலை தெரிவிக்கும் அதேவேளை அவர் இந்தத் துறையில் முன்னேறி தாயகத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துகிறது.




# "தமிழீழத்தில் விளையாட்டு" சஞ்சிகை வெளியானது

தாயகத்தின் பல்வேறு விளையாட்டுச் செயதிகளையும் தாங்கிய "தமிழீழத்தில் விளையாட்டு" எனும் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

மாதாந்தம் வெளிவரும் இச்சஞ்சிகை தாயகத்தின் விளையாட்டுச் செய்திகள், புகைப்படங்கள் மற்றும் தாயகத்தின் முன்னணி வீரர்களுடனான நேர்காணல் என்பவற்றை தாங்கி வெளிவருகின்றது தற்பொழுது வெளிவந்துள்ளது. மேற்படி சஞ்சிகை முதலாவது இதழாகும்.



இங்கிலாந்து தொடருக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் சொஹைப் அக்தர் சேர்க்கப்பட்டுள்ளார். இவருக்கும் இன்சமாமுக்கும் சுத்தமாக ஆகாது. அதற்காக என்ன செய்ய முடியும் முக்கியத்துவம் வாய்ந்த தொடருக்காக நேற்று முன்தினம் இருவரும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர்.

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை தகுதியானவர்கள் பதிவு செய்யவும்

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சைக்குத் தயார்படுத்துவதற்கான வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வகுப்புக்கள் சனி அல்லது ஞாயிறு நாட்களில் நடைபெறும் இப்பரீட்சைக்குத் தோற்றுவோர் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த (சாதாரணம்) படித்தவராகவும் நல்ல உடற்தகைமையுடையவராகவும் உதைபந்தாட்ட தகைமையுடையவராகவும் இருத்தல் அவசியமாகும். இந்த வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் புதுக்குடியிருப்புப் பகுதியில் சி.தர்மசீலன், புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் கிளிநொச்சிப்பகுதியில் விளையாட்டு அபிவிருத்திச்சபைச் செயலாளர் இ. பரஞ்சோதியிடமும், பூநகரிப்பகுதியில் நடைபெறவுள்ள வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்புவோர் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த மூர்த்தியிடம் பதிவு செய்யும் படியும் வேண்டப்படுகின்றனர்.



கிரேக்க உதைபந்தட்ட வீரர் சொட்டிரியஸ்கைகர் ஜியகோஸ் குற்றச்சாட்டின் பேரில் களத்தை விட்டு மத்தியஸ்தரால் வெளியேற்றப்படுகிறார்


# சிறிலங்கா- இந்திய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் டிசம்பரில் சென்னையில்



சிறிலங்கா-இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது. இந்திய கிரிக்கெட் சபை இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போது ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியுடன் பங்கேற்கும் சிறிலங்கா அணி சிறிலங்காவுக்கு திரும்பி மீண்டும் இந்தியாவுக்கு செல்லவுள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் டிசம்பர் இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சென்னையில் ஆரம்பமாகிறது. இரண்டாவது டெஸ்ட் போட்டி புதுடில்லியிலும், மூன்றாவது போட்டி கான்பூரிலும் நடைபெறவுள்ளது.சிறிலங்கா அணியில் சகலதுறை ஆட்டக்காரர் சனத்ஜெயசூரிய இடம்பெறுவதுசந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



முல்தானில் இங்கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்தால் இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோன் பங்கேற்பது சந்தேகமே. இதனால் பார்வையாளர் அரங்கில் சோகமாக அமர்ந்து கொண்டு சக வீரர்களின் பயிற்சியை பார்வையிடுகிறார் வோன்.

# மீற்றர் குறோச் தொடரில் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை

## — மைக்கல் ஓவன்



இனறு ஒல்ட் ட்ரப்பட்டில் நடைபெறும் ஆர்ஜண்டினாவுக்கு எதிரான உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து அணியின் இளம் வீரர் பீற்றர்குறோச் தொடரில் ரசிகர்கள் எதுவித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை என அணியின் தலைவர் மைக்கல் ஓவன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ஆஸ்திரியாவுடனான போட்டியில் ஆடிய போது ரசிகர்கள் அவரை அவமதித்துள்ளனர். எனினும் அவர் சிறந்த வீரர் அவர் பயிற்சியின் போது நன்கு செயற்பட்டவர் என ஓவன் தெரிவித்துள்ளார். சிலர் அவரை விமர்சித்துள்ள போதும் அது அவரின்திறமையை வளர்ச்சிபெறச் செய்துள்ளது என்றும் பயிற்சியின் போது அவர் ஆடிய விதத்தைப் பார்த்தால் ரசிகர்கள் ஆச்சரியமடைவர் என்றும் தெரிவித்துள்ளார்.லிவர்பூல்,இங்கிலாந்து அணிகளுக்காக 16 போட்டிகளில் பங்கேற்ற குறோச் இதுவரை ஒரு கோலையும் பெற்றுக் கொடுக்கவில்லை. எனினும் லிவர் பூல் அணி அவரை ஏழு மில்லியன் பவுணுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

# டென்னிஸ் மூத்த வீராங்கனை மேரிபியர்சுக்கு 500 ஆவது வெற்றி



டென்னிசில் மூத்த வீராங்கனையான மேரி பியர்ஸ் தனது 500 ஆவது வெற்றியை ருசித்தார்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் டபிள்யூ. டி.ஏ.டூர் வெற்றிக் கிண்ண தொடர் நடக்கிறது. இரண்டாவது சுற்றுப் போட்டிகள் கடந்த புதனன்று நடந்தன. இதில் 'பிளாக்' பிரிவில் இடம் பெற்றுள்ள பிரான்சின் மேரி பியர்ஸ் ரஷ்யாவின் எலினா டெமன்டிவாவை எதிர்த்து விளையாடினார். விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் பியர்ஸ் 6-2, 6-3 என்ற நேர் செட்களில் டெமன்டிவாவை வீழ்த்தினார். இதன் மூலம் பியர்ஸ் டென்னிஸ் அரங்கில் தனது 500 ஆவது வெற்றியைப்பெற்றார்.

## வோனுக்குப் பதிலாக அறிமுக வீரர் குக்



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தலைவர் மைக்கல் வோன் விளையாட மாட்டார் எனத் தெரிகிறது. இதனால் அறிமுக வீரர் அலஸ்டைர் குக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் முல்தானில் இன்று தொடங்குகிறது இதில் இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோன் விளையாடமாட்டார் எனத் தெரிகிறது. பயிற்சிப் போட்டியின்போது ஏற்பட்ட கணுக்கால் காயத்திலிருந்து வோன் இன்னும் முழுமையாகக் குணமடையவில்லை. இதனால் முன்னெச்சரிக்கையாக தொடக்க ஆட்டக்காரரான அலஸ்டைர் குக்கை அணியில் சேர்த்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை.

குக் முதல் தரப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியுள்ளார். இந்த ஆண்டின கவுண்டி சம்பியன்ஷிப் தொடரில் நான்கு சதம் அடித்துள்ள இவரது சராசரி 48.03 முல்தான் டெஸ்டில் இவர் விளையாடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் வோன் இரண்டாவது போட்டியில் கட்டாயம் விளையாடுவார் என இங்கிலாந்து மருத்துவக் குழு கூறியுள்ளது.

# கடைசி ஒருநாள் போட்டி இன்று ஆறுதல் வெற்றிக்கு ஏங்கும் சிறிலங்கா





இந்திய-சிறிலங்கா அணிகளுக்கிடையிலான இறுதி ஒருநாள் போட்டி இன்று நடைபெறுகிறது. ஒருநாள் தொடரை வென்றுவிட்ட இந்திய அணிக்கு இன்றைய கடைசி மோதல், தென் ஆபிரிக்க தொடருக்கு ஒரு பயிற்சியாக அமைய தோல்வியால் சோர்ந்து விட்ட சிறிலங்கா அணியோ ஆறுதல் வெற்றிக்காகக் காத்துக்கிடக்கின்றது.

இந்திய அணிக்கோ இன்றைய போட்டி பயிற்சி ஆட்டமாகத்தான் இருக்கும். இலங்கை அணியின் நிலைமையோ தலைகீழ்.தொடர்ந்து அடுத்தடுத்த தோல்விகளால் துவண்டு போயிருக்கும் இவர்கள், ஆறுதல் வெற்றியைத்தேடி களமிறங்குகிறார்கள். இப்போட்டியில் எந்த அசம்பாவிதமும் நடக்காதவாறு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரோடா கிரிக்கெட் சங்கம் ரூ.7.45 கோடிக்கு "காப்புறுதி" செய்துள்ளது.

# அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் ஒரு நாள் வீரர் ஆன்ரூ சைமன்ட்ஸ்



ஒருநாள் போட்டி வீரரான அவுஸ்திரேலியாவின் ஆன்ரூ சைமன்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் இணைக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான இரண்டாவது போட்டியில் களமிறங்குகிறார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று 1-0 முன்னிலை பெற்றுள்ளது. இரண்டாவது போட்டி வரும் 17 இல் ஹோபார்ட் நகரில் நடைபெறவுள்ளது.

இதற்கான 12 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியில் சகலதுறை வீரர் ஆன்ரு சைமன்ட்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். காயம் ஏற்பட்டுள்ள ஷேன் வொட்சனுக்குப் பதிலாக இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக கடந்த ஆண்டு நடந்த இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்டில் சைமன்ட்ஸ் விளையாடியுள்ளார்.



முல்தானில்இங்கிலாந்து—பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்போட்டி இன்று தொடங்கும் நிலையில் நேற்று மைதானத்தில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு வீரர்



## சிந்தனைக்கு

எதிரிகளை விட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 12.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com


## துரோகிகளின் காவலர்கள்!

விடுதலைப்புலிகள் அமைப்பில் பிளவை உண்டுபண்ணியவர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளின் மூலம் கருணாவை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று அவருக்கு வெளியுலகத்தை காட்டியதினால் கருணா விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்பட முடிவெடுத்தார் என ஐக்கிய தேசியக்கட்சி தரப்பினர் பெருமைபேசத் தொடங்கியுள்ளனர்.

இதேசமயம் இக்கருத்தை தற்போதைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தின் தலைவர் ஒருவரும் ஊர்ஜிதம் செய்வது போன்று பேசியுள்ளார். கருணாவை உருவாக்கிவர்கள் ஐ.தே.கட்சியே என மங்கள சமரவீர தெரிவித்ததோடு, இதனையே தாம் அன்றும் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில் முதலில் கூறவேண்டியது ஒன்றுள்ளது. அதாவது, கருணாவை உருவாக்கியவர்கள் நாங்களே எனக்கூறும் ஐ.தே கட்சியினரும் அதனை ஊர்ஜிதம் செய்யும் சிறிலங்கா சுதந்திரக்கட்பினரும் இவ்விடயத்தை வெளியிடும் நோக்கம் ஒன்றாக இல்லை. அதாவது ஐ.தே. கட்சி இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளமையானது இதன் மூலம் இனவாதிகளைத் திருப்தி செய்து சிங்கள வாக்கு வங்கியில் செல்வாக்குச் செலுத்தலாம் என்ற எதிர்பார்ப்புடனானதாகும்.

இதேவேளை சுதந்திரக்கட்சியினரோ ஏதோ பெரும் உண்மை வெளிவந்து விட்டது போன்று பேசிவருகின்றனர். அதாவது ரணில்விக்கிரமசிங்க மீது தமிழ் மக்கள் சிறிதளவு கொண்டிருந்த நம்பிக்கையும் சிதைப்பதற்கு ஓர்சந்தர்ப்பம் உருவாகியுள்ளது என எதிர்த்தரப்பினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதன் மூலம் சிறுபான்மையினரின், குறிப்பாக, தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்குக் கிடைக்காது செய்துவிடலாம் எனக் கருதுகின்றனர்.

ஓரளவேனும் ஐ.தே.கட்சியினர் இத்தகையதொரு அறிவித்தலை விடுவார்கள் என எவருமே எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் வடக்கு கிழக்கில் ஐ.தே.கட்சி வாக்குகளை பெறக்கூடியதொரு சூழலே காணப்பட்டது. ஆனால் தற்போதைய ஐ.தே.காவின் நிலைப்பாடும் தமிழ் மக்களின் வாக்கை அவர்களுக்கு சிறிதளவேனும் பெற்றுக்கொடுக்குமா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை வெறும்வாய் சப்பிவந்த ஐ.ம.சுதந்திர முன்னணியினருக்கு இப்பொழுது அவல்கிடைக்கப்பெற்றது போன்றாகிவிட்டது. அதாவது விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தியதோடு கருணாவை பாதுகாப்பாகக் கொழும்பு கொண்டுவந்து சேர்த்ததும் ஐ.தே.கட்சியே என கூறுவதன்மூலம் ஐ.தே.கட்சியின் மீது; ரணில் மீது தமிழ் மக்கள் அதிருப்தி கொள்வது தவிர்க்க முடியாதுபோகும். ரணிலுக்குக் கிடைக்கக்கூடிய வாக்குகள் வீழ்ச்சி அடையும் என்பதே அவர்களின் எதிர்பார்க்கையாகும்.

ஆனால், இவ்விரு சிங்களக் கட்சிகள் கூறுவது போன்று கருணாவின் வெளியேற்றத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொடர்பில்லை. சிறிலங்கா அரசாங்கங்கள் எவ்வாறு ஏனைய சமூக விரோதிகளுக்கும், தேசவிரோதிகளுக்கும் பாதுகாப்பும், அரவணைப்பும் வழங்கி வருகின்றதோ அதேபோன்றே கருணாவிற்கும் பாதுகாப்பு வழங்கியது என்பதே உண்மை. இதனை ஐ.தே.கட்சி அரசாங்கம் ஆட்சியில் இருந்ததினால் செய்தது. ஐ.ம.சு. முன்னணி ஆட்சியில் இருந்தாலும் இதனையே செய்திருக்கும்.

ஏனெனில் கருணா வெளிநாடுசென்று வந்ததினாலோ சிறிலங்கா அரசின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையிலோ அவர் புலிகள் இயக்கத்தைவிட்டுவெளியேறுவதாகக்கூறுவதெல்லாம் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. அதாவது கருணா விடுதலைப்பலிகள் இயக்கத்தில் இருந்து ஓடியமை அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு புலிகளின் தலைமை தயாராகியமையே காரணமாகும். இதனை எதிர்கொள்ள முடியாமலே கருணா இயக்கத்தைவிட்டு ஓடினார்.

இருப்பினும், கருணாவிற்கு நெருக்கடி ஏற்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி நேரடியாக அவரைக் காப்பாற்றி கொழும்பிற்கு கொண்டு செல்வதற்கு உதவியது என்பது நிராகரிப்பதற்கில்லைத் தான். அதாவது, கருணா தப்பிச் செல்வதற்கு சிறிலங்கா அரசுடன் தொடர்பு எடுப்பதற்கு சிரமப்படாததொரு நிலையை ஐ.தே.கட்சி ஏற்படுத்திக் கொடுத்திருந்ததெனில் மிகையில்லை.

ஆகையினால் கருணாவை பிரித்தோம், புலிகளைப் பலவீனப்படுத்தினோம் என உரிமைகோருவதும் ஒரு தரப்பை மற்றத் தரப்பு சுட்டிக்காட்டுவதும் அர்த்தமற்றவையாகும். உண்மையில் ஒரு அமைப்பின் ஒழுங்கு, கட்டுப்பாட்டை மீறிய ஒழுக்கக் கேடாக நடந்து கொண்ட ஒருவருக்கு சிறிலங்கா அரசு பாதுகாப்பு வழங்கி வருகின்றதென்பதே சரியானதாகும்.

இதேசமயம் கருணாமீது புலிகள் நடவடிக்கை எடுத்தபோது கருணாவினால் பெரும் இராணுவ, அரசியல் இலாபம் ஈட்டலாம் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் எதிர்பார்க்கையை கருணாவால் நிறைவேற்றமுடியாது போய்விட்டதென்பதே நிஜமாகும். அதாவது கருணாவினால் தமிழரின்போராட்டம் முடிவிற்கு வந்துவிடும் எனக் கருதியவர்களுக்கு கருணா பெரும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளார் எனின் மிகையாகாது.




# தடிகொடுத்து அடிவாங்க தமிழர்கள் அரசியல் முட்டாள்கள் அல்ல

## –"பேரிகை" அமைப்பு தெரிவிப்பு

தமிழ் மக்களைப் பொறுத்த வரை எமது தலைமை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும். எனவே எங்கோவொரு தேசத்தில் நடக்கும் தேர்தல் என்ற உணர்வே எம்மிடம் மேலோங்கியுள்ளது. இந்த தேர்தலாலும், வெற்றி பெறப்போகும் எந்த வேட்பாளராலும் நாம் அடையக் கூடியது எதுவுமே இல்லை. தடிகொடுத்து அடிவாங்க தமிழ் பேசும் மக்கள் அரசியல் முட்டாள்களும் அல்ல என கிளிநொச்சி சமூக கலை இலக்கிய பங்காளிகளுக்கான அமைப்பான பேரிகை தெரிவித்துள்ளது.

தமிழ் பேசும் மக்களின் காப்பரணாகவும், இலங்கையில் ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களின் விடுதலைக் குரலாகவும், இருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பு இதுவரை தமிழ் பேசும் சமூகத்தினராகிய நாம் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்பது பற்றியோ அல்லது எந்த வேட்பாளருக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பது பற்றியோ எவ்வித அறிவிப்பையும் வெளியிடவில்லை. தனி மனித சுதந்திரத்தையும், வாக்குரிமையையும், மதிக்கும் விடுதலைப் புலிகள் தமது சொந்த முடிவுகள் எதனையும், மக்கள் மீது திணிக்கவில்லை. தேர்தலை ஆதரிப்பதோ அல்லது பகிஷ்கரிப்பதோ எதுவாகயிருந்தாலும், அது தமிழ் பேசும் மக்கள் எடுக்க வேண்டிய முடிவு என்று அறிவித்து சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மதிப்பளித்து மிகவும் நாகரிகமான நடத்தையை காண்பிக்கின்றனர்.

ஆனால் தெற்கிலோ நிலைமை வேறுவிதமாக இருக்கின்றது. எப்பாடுபட்டாவது ஆட்சியைக் கைப்பற்றுவது என்பதில் இரண்டு பிரதான கட்சிகளும், இரண்டு பிரதான வேட்பாளர்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். இரண்டு பிரதான வேட்பாளர்களது தனி நபர் கோவைகளும் மிகமிக மோசமானவையாக இருக்கின்றன.

இரண்டு பிரதான வேட்பாளர்களது அழுக்கான, தமிழர் விரோத பயங்கரவாத, நடத்தைப் பிறழ்வுகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இவை இவ்வாறு இருக்க சித்தாலேப வைத்தியர் விக்ரர் ஹெட்டிக்கொட விடுதலைப் புலிகளை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். அதாவது புலிகள் அமைச்சரவைக்காகவே போராடுவதாக அவர் புரிந்து கொண்டுள்ளார். அவரது அரசியல் ஞானம் அவ்வளவுதான்.

இப்படியான தமிழ் விரோத பயங்கரவாத சதி நோக்கம் கொண்ட வேட்பாளர்களால் தேர்தலுக்குப் பின் தமிழ் பேசும் மக்களது வாழ்வுக்காகவும் சமூக அபிவிருத்திகாகவும், என்ன செய்து விட முடியும்? தமிழ் பேசும் மக்களை அடக்கி அவர்களது சுதந்திர தாகத்தை இல்லாதொழிப்பதற்கு வேறு புதிய சட்டங்களைத் தான் சிங்களப் பெரும்பான்மை பலத்துடன் அவர்களது பாராளுமன்றில் நிறைவேற்ற முடியும் என பேரிகை தெரிவித்துள்ளது.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பொருட்கள் கொண்டு செல்ல கட்டுப்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான மூதூர் கிழக்கு பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்படும் முட்டை, இறைச்சி, எரிபொருள் போன்ற பொருட்களுக்கு இராணுவம் கட்டுப்பாட்டை விதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டைப் பறிச்சான் காவலரண் ஊடாகச் செல்லும் பயணிகளுக்கே இந்தக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மாலை ஆறு மணிக்குப் பின்னர் அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (25)

# பொலிஸ்மா அதிபருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு

பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணாண்டோவிற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் செய்துள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

நீதிபதிகள் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 70 பொலிஸ் அதிகாரிகள் இணைந்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அந்த அதிகாரிகள் தமது பிரிவினர் பொலிஸ் அதிரடிப் படைக்கு சமமான சேவை செய்துள்ள பொழுதிலும், அதிரடிப் படையினருக்கு வழங்கும் கொடுப்பனவுகள் தமக்கு வழங்கப்படுவதில்லை எனக் குற்றஞ் சாட்டியுள்ளனர். தமக்கு உரிய இந்த கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென உயர் நீதி மன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு இட வேண்டும் என்றே இந்த அதிகாரிகள் அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். (32)

## 310 தேர்தல் வன்முறை

சனாதிபதித் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் இதுவரை 310 தேர்தல் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதில் 104 சம்பவங்கள் மட்டுமே தேர்தல் சட்டங்களை மீறும் பெரிய அளவிலான வன்முறை சம்பவங்கள் எனவும், 206 சம்பவங்கள் சிறிய அளவிலான சம்பவங்கள் என மையத்தின் தேசிய அமைப்பாளர், டீ.எம். திசாநாயக்க தெரிவித்தார். இவற்றில் அதிக அளவிலான சம்பவங்கள் புத்தளம் மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. சட்ட விரோதமான துப்பாக்கி சம்பந்தப்பட்ட 16 முறைப்பாடுகள் தமது மையத்திற்கு கிடைத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தவளைப்பாய்ச்சல் வெற்றிச்சமர் நிகழ்வில்....



# தவளைப்பாய்ச்சல் வெற்றிச்சமர்; சிறப்புற நடந்த நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்திய பூநகரி சிறிலங்காப் படைமுகாம் வெற்றிகொள்ளப்பட்ட தவளை நடவடிக்கையின் வெற்றிவிழா நேற்று பூநகரியில் பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

1992 ஆம் ஆண்டு சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருந்த பூநகரிப்பெருந்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தி வெற்றி கொண்டிருந்தனர். இந்த நடவடிக்கையின் மூலம் படையினரின் கடற்கலங்கள் தகர்த்து மூழ்கடிக்கப் பட்டது. அதே போல யுத்த டாங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்களும் தகர்த்தழிக்கப்பட்டிருந்ததுடன் பெருமளவான ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டிருந்தது.

பெரும் எண்ணிக்கையிலான படையினரை அழித்த இந்தப் பெருஞ்சமர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வீச்சை அதிகரிக்கச் செய்திருந்தது.

இந்நிலையில் இப் படைத்தளம் கைப்பற்றப்பட்ட நினைவு நாளைக் குறிக்கும் விதமாக நேற்று பூநகரிச் சந்தியில் அமைக்கப் பட்டுள்ள சமர் நினைவுத் தூபி முன்றலில் நிகழ்வுகள் நடைபெற்றது. மாலை 5.00 மணிக்கு ஆரம்ப மான இந்நிகழ்வில் முதலாவதாக பூநகரி மகாவித்தியாலய முன்றலில் இருந்து மாணவர்களின் பாண்ட் இசை அணிவகுப்புடன் மாவீரர்களின் உருவப் படங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

சமர் நினைவுத் தூபி அமைக்கப்பட்ட இடத்தை வந்தடைந்ததும் பொது ஈகச் சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட தளபதி செந்தாளன் ஏற்றினார்.

தவளைச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்கரும்புலி மேஜர்கோபியின் உருவப்படத்திற்கான சுடரினை கிளிமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர். சிவநாத், பூநகரிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப் பாளர் ஈகைவேந்தன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மலர் மாலையை மன்னார் மாவட்ட சமாசங்களின் பொறுப்பாளர் அச்சுதன் அணிவித்தார். மேஜர்கணேசின் உருவப் படத்திற்கு கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி, மேஜர் கணேசின் தயார்ஆகியோர் சுடர் ஏற்றி வைக்க மலர் மாலையை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. மலர் மாலையை நாச்சிக்குடா காவல் பணிமனைப் பொறுப்பாளர் குகநாதன் அணிவித்தார்.

நிகழ்வில் நினைவுரைகளை பூநகரிப் பிரதேச செயலாளர் சிறிஸ் கந்தகுமார், பூநகரி சமாசத்தலைவர் பிறான்ஸ்சிஸ், விநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றது. மேற்படி நிகழ்வுகள் முழங் காவில் பிரதேச இந்து ஆலய ஒன் றியத் தலைவர் குலேந்திரன் தலைமை யில் இடம் பெற்றது. இதில் பெருமளவான வர்கள் உணர்வெழுச் சியுடன் கலந்து கொண்டனர். (லோ.கு)

## ஈ.பி.டி.பி அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ஸ்ரீதர் திரையரங்கில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம்மீது கைக்குண்டு வீசப் பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலினால் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்த உறுப்பினர்களது சேத விபரம் பற்றிய தகவல் எதுவும் தெரிய வரவில்லை. கைக்குண்டு வீசப்பட்டதையடுத்து அலுவலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

(கீ, 37.28)

## வாக்காளர் அட்டைகள் அல்லைப்பிட்டியில் பறிப்பு

(வலிகாமம்)

யாழ்.தீவகம் அல்லைப் பிட்டிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகள் இனந்தெரியாத நபர்களால் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு யாழ்பிரதம அஞ்சல் அலுவலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு தொகுதி வாக்காளர் அட்டைகளே யாழ். பண் ணைப் பகுதியில் வைத்து பறி முதல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டது.

வாக்காளர் அட்டைகளை எடுத்துச்சென்றவர்களை உந்துருளி ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் வழி மறித்து பறித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாவும் பொலிசார்தெரிவிக்கின்றனர்.

(37,33)

## தமிழீழ வரலாறும் சமூகக் கல்வியும் போட்டித் தேர்வு 22 ஆம் திகதி

(நமது நிருபர்)

எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் போட்டித்தேர்வு அன்றையதினம் நடைபெறமாட்டாது எனவும்இத்தேர்வு எதிர்வரும் 22 ஆம்திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டத்தில் எதிர்வரும் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு அனைத்துப் பள்ளிகளிலும் இத்தேர்வு நடை பெறும் என்பதை அனைத்துப் பள்ளி முதல்வர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் வலயக்கல்விப் பணிப் பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

## ரணிலின் பாரியபடங்கள் இனந்தெரியாதோரால் தீக்கிரை

பதுளையில் அமைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பாரிய உருவப் படங்கள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணியின் பதுளை அலுவலகத்திற்கு முன்பாக அமைக் கப்பட்டிருந்த படங்கள் மற்றும் அலங்கார வளைவுகள் நேற்று முன்தினம் அதிகாலை மூன்று மணியளவில் இனந்தெரியாதோரால் தீவைக்கப்பட்டுள்ளன. இனந்தெரியாத குழுவினர் கொடிகள் மற்றும் தோரணங்களை அறுத் தெறிந்துள்ளதுடன் படங்கள் அனைத்தையும் தீவைத்து எரித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மேற்படி இளைஞர் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளர் ஹரேன் பெர்னாண்டோ பதுளை பொலிஸ் நிலையம், மாவட்ட தேர்தல் அலுவலகம், தேர்தல் கண்காணிப்பு குழுவினர் ஆகியோரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

### நேரடி...

மொறகொட மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிரதிநிதிடக்ளஸ் அழகப்பெருமவிற்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. இதன் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தம்முடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை பிரதமர் ஏற்றுக்கொண்டதுடன் அதனை உறுதிப்படுத்தி கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்தார். (32)

### ஆயுதக்...

இந்த நிலையில் இவர்களால் கடத்தப்பட்ட தமிழ்ச் சிறுவர்கள், இளைஞர்களின் பெயர் விபரங்களை ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டிய சர்வதேச தமிழர் ஒன்றியம் இது போன்ற செயல்களால் மிகுந்த கவலை அடைவதாகவும் இது குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### யாழ்.இல்

கமல் ஆகியோர் சிறையை உடைத்துத் தப்பியதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.தப்பியவர் இருவர் மீதும் மல்லாகம் மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விரைவில் விசாரணை நடைபெற இருந்ததாகவும் தெரிய வந்துள்ளது. (33,37,கீ,28,32)

### திருநெல்வேலியில்...

சுமார் இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமான நேரம் சிகிச்சை வழங்கப்பட்ட போதும், இறுதியில் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்திலிருந்து திருநெல்வேலிச் சந்தைக்கு " பிக்அப்" வாகனம் ஒன்றில் மரக்கறி கொள்வனவு செய்யபொலிசார் வந்ததாகவும், மரக்கறியைக்கொள்வனவு செய்துவிட்டுப் புறப்படத் தயாரானபோதே இத்தாக்குதல் இடம் பெற்ற தாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இது போன்றதொரு தாக்குதல் கடந்த மாதமும்யாழ்.திருநெல்வேலிப் பகுதியில் வைத்து பொலிசார் மீது மேற்கொள்ளப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை திருநெல்வேலிச் சந்தியில் பொதுமக்கள் வியாபாரிகள், ஆட்டோ சாரதிகள் மீது படையினர் நேற்றுதாக்குதல் நடத்தியுள்ளனர்.

பொதுமக்கள், வியாபாரிகள், ஓட்டோ சாரதிகள் வர்த்தகர்கள் மற்றும் முச்சக்கர ஓட்டுநர்கள் மீதும்படையினர் மேற் கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளை திரு நெல்வேலி வர்த்தக சமூகம், முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சங்கமும் கடுமையாகக் கண்டிப்பதாக தெரிவித்துள்ளது. (27,28,33,கீ)

### தேர்தல்...

நடத்தியதுடன் யாழ்ப்பாணம் கோவில் வீதியிலுள்ள புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் அலுவலகத்தில் வைத்து யாழ். மாவட்டத்தில் சேவையாற்றும் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப்பேச்சு நடத்தினர். இதில் யாழ்.குடாநாட்டில் வாழும் மக்களது உரிமைகள் பாதிப்படையாத விதத்தில் தேர்தல் வாக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான அழுத்தத்தை தாம் தேர்தல் செயலகத்துக்கு வழங்கியுள்ளதாகவும் கூறியதுடன். எதிர்வரும் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பு செய்யத்திட்டமிட்டுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் இந்த விடயத்தை தேர்தல் நிறைவு பெற்றபின் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடும் அறிக்கையில் தாம் நிச்சயமாக குறிப்பிடுவோம் என்றும் கூறினார். (33,27)

### மாணவர்கள்...

இன்றைய மாணவர்களின் கள நிலைமை சம்பந்தமாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சி.நவராஜ்யும் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம் பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழ[illegible] மாணவர் ஒன்றியத் தலைவர் சி.விஜய[illegible]னும் தமிழ் பாடத்திட்டத்தில் மறைக்[illegible]வையும் நீக்கப்படுபவையும் பற்றி யாழ்ப்பா[illegible] கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி க.[illegible]னும் இலங்கையின் கல்விக் கொள்கையில் உள்ள குறைபாடுகள்பற்றி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் சி.சந்திரகுமாரும் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை களும் அவைதமிழ் மாணவர்களைப் பாதிக்கும் விதமும் குறித்து சாவகச்சேரி றிபேக்கல்லூரி அதிபர் சி.அருந்தவபாலனும் சுனாமியும் மாணவர்களும் பற்றி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் ந.சண்முகலிங்கமும் மற்றும் மாணவர்களிடையே தமிழ் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் பதில்கள் என்னும் தலைப்புக்களில் விடயங்கள் எடுத்து ஆராயப்பட்டன

மேற்படி விடயங்களில் ஆய்வரங்கங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மாணவர்களின் எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பங்கு பற்றிய மாணவர்கள் குழுக் களாகப் பிரிக்கப்பட்டு தற் போதைய நிலைமைகளை கருத்திற் கொண்டு பின்வரும் குழுக்களும் அமைக்கப் பட்டுள்ளன.

1.தினமும் மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தரவுகளை சேகரிக்கும் குழு

2.மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகல் மற்றும் வறுமை தொடர்பான விபரங்களைச் சேகரித்தல்

3.பெண்கள் மட்டும் அடங்கும் பெண்கள் அமையம்

4.ஆரம்ப இடைநிலை உயர்தரம் ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற் கான குழு முதற்தடவையாக மாணவர்கள் தமது பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஒன்று கூடியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இதில் கலந்து கொண்ட பலரும் மாணவர்களின் அடிப்படையில் உள்ள பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(41,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 12 ஆம் ஆண்டு நினைவினில் நாம்...

**தாயக விடுதலைக்காக தானைத்தலைவன் வழி -புறப்பட்ட வேங்கையே!**

**முல்லை மணலாறு மாவட்ட மக்களின் மனதில் நிறைந்தவனே!**

**ஆண்டு பன்னிரெண்டு சென்றாலும் என்றும் உம் நினைவுடன் நாம்...**




## முல்லை மணலாறு மாவட்ட சிறப்புத்தளபதி

# லெப்.கேணல் அன்பு/தாடி

குறிப்பு: எதிர்வரும் 12-11-2005 அன்று குமுழமுனையில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள நினைவுநிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

- குமுழமுனை மக்கள் -